சிங்க நாதம்

[பாரத நாடு வீர சக்தி பெற்று
வெற்றித் திருவுடன் பொலிய
ஊக்கும் ஆவேசப் பாடல்கள்]

★

கவியோகி
சுத்தானந்த பாரதியார்
ஆர்த்தவை

T. 1385

★

சுத்தானந்த நூலகம்
யோக சமாஜம் :: சென்னை-20.

சிங்கநாதம்

(SIMHA NADAM)

First Edition
March, 1963

Patriotic War Songs for India of the Atomic Age

BY

KAVI YOGI
SHUDDHANANDA BHARATI

All Rights Reserved by the Author.

652
1966

894-8111

Price Rupee: ONE

SHUDDHANANDA LIBRARY
YOGA SAMAJ :: MADRAS–20.

சிங்க நாதம்

[பாரத நாடு வீர சக்தி பெற்று
வெற்றித் திருவுடன் பொலிய
ஊக்கும் ஆவேசப் பாடல்கள்]

கவியோகி

சுத்தானந்த பாரதியார்

ஆர்த்தவை

சுத்தானந்த நூலகம்

யோக சமாஜம் :: சென்னை-20.

சிங்கநாதம்

(SIMHA NADAM)

First Edition
March, 1963

Patriotic War Songs for India
of the Atomic Age

BY

KAVI YOGI
SHUDDHANANDA BHARATI

All Rights Reserved by the Author.

Price Rupee: ONE

SHUDDHANANDA LIBRARY
YOGA SAMAJ :: MADRAS–20.

சிங்க நாத பேரிகை!

சிங்க நாத பேரிகை
திக்கதிரக் கொட்டுவோம்
அங்க மெல்லாம் திண்புறும்
ஆண்மை ரத்தம் துள்ளவே!

எங்கும் வீரதீரர்கள்
ஏறுபோலத் தாவியே
சங்கடப் பகைக்குலம்
தளர்ந்துவீழப் போர் செய்வோம்!

கலகப் பேய் ஒழியவே
கவலைப் பேய் அழியவே
உலகி லின்பம் பொழியவே
உண்மை யமைதி நிலவவே!

அருள் விளங்கும் பாரதம்
அறம் விளங்கும் பாரதம்
இருளரக்கர் இதனிடை
எல்லைமீறி வருவதோ!

இந்தியச் சுதந்தரம்
இலகிட நிரந்தரம்
தந்துயிரைத் தாங்குவோம்
தருமம் வெற்றி ஓங்குமே!

ஆத்ம சக்திக் கனலினால்
அணுயுகத்தை யாளுவோம்
பூத்த புதிய ஞானத்தால்
புது யுகத்தை ஆக்குவோம்!

விஞ்ஞான யுகத்தின் மெய்ஞான மணிகளே, எழுந்திருங்கள்! புதிய குரலில் புதிய கீதம் பாடுவோம். காந்தி யுகத்தில் சர்க்காவின் ஓங்காரத்துடன் சாந்தயாழிசை கேட்டோம். கால சக்தியின் குரல் மாறிவிட்டது. அணுக்கதிர் படபடக்கும் ஸ்பட்நிக் யுகத்தில் பழைய பல்லவி மாறி, உலகம் எல்லாத் துறைகளிலும் புதுமை பெறுகிறது. இந்தக் கால மனிதன் அறிவில் ஓங்கி, ஆகாயத்தில் குடியேறப் பார்க்கிறான். ஆற்றலில் ஓங்கி வானணுக்களை இயக்குகிறான்; இயற்கையை வென்று செயற்கை யற்புதம் செய்கிறான். இடமும் காலமும் மிகவும் குறுகி விட்டன. லண்டனும் சிகாகோவும் நமக்கு அடுத்த தெருப்போலாயின. யந்திரத் திறனால் மனிதன் மிக விரைவில், எளிதில் உடலுணவுத் தேவைகளை யடைகிறான். இந்த விஞ்ஞான யுகத்தில் அஞ்ஞானமும் போட்டி போட்டுக் கொடுமை செய்கிறது. அரசியல் அசுரவியலாய் விட்டது. வல்லரசுகள் கொல்லரசுகளாய் எளியர் நாடுகளை விழுங்குகின்றன. அந்தக் கால அசுரருக்கு அணுசக்தி யில்லை; ராகெட் விமான மில்லை. இந்தக் காலம் கொடிய நெடிய கருவிகளால் மிக எளிதாக உலகை அழிக்கலாம். கண்மூடித் திறக்குமுன் கோடி மக்கள் மண்மூடிப் போகலாம். இந்த அசுர விஞ்ஞானம் மாறும் அமரசக்தி, ஆத்மசக்தி இந்தியாவிடம் உறங்கிக் கிடக்கிறது. அந்தச் சக்தியை எழுப்பி, போகவுலகில் சமயோக மின்சக்தி பாய்ச்சவே இந்தியா விடுதலை பெற்றது. இன்று இந்தியா உலகம் போற்ற முன்னேறும் உத்தமக் குடியரசென விளங்குகிறது. ஆனால் அதற்கு உள்ளும் புறமும் பகைவர் கூட்டம் சூழ்ந்து தொல்லை தருகிறது. அந்தப் பகையின் பான்மையை நீங்கள் அறிவீர்கள். அறத்தைக்காக்க அன்பை வளர்க்க அமைதி நாட்ட அருளை விளக்க, நமது அமர பாரதந்தவிர வேறு நாடில்லை.

எல்லைத் தொல்லை, இல்லத் தொல்லை, வறுமைத் தொல்லை, மடமைத் தொல்லை, துரோகத் தொல்லை; எல்லாம் நாட்டைச் சூழ்ந்து சதிசெய்கின்றன. நாடெங்கும் நெருக்கடி!

வீட்டு நெருக்கடி, ஊட்டு நெருக்கடி, ஏட்டு நெருக்கடி, தேட்டு நெருக்கடி, நோட்டு நெருக்கடி, பூட்டு நெருக்கடி தோட்டு நெருக்கடி, மாட்டு நெருக்கடி. ஓட்டு நெருக்கடி;

சீட்டு நெருக்கடி, பாட்டு நெருக்கடி, ஆட்டு நெருக்கடி வேட்டு நெருக்கடி வாட்டு நெருக்கடி நாட்டு நெருக்கடி, அங்கும் இங்கும் எங்கும் நெருக்கடி. பொங்கும் சக்தி பொழிந்தெம்மைக் காவாய். உலகை யாளும் ஒருவனே போற்றி! என்று நமது நெஞ்சம் துடிக்கிறது.

வேத ரிஷிகளும், வியாசர் வால்மீகி சுகர் சங்கராதி முனிவரும் புத்தர், காந்தி போன்ற புனிதரும் விளங்கிய பாரதம், பமரஹம்ஸர், அரவிந்தர், ரமணர், பாபா போன்ற மஹான்கள் விளங்கும் பாரதம்; கம்பர், வள்ளுவர், தாகூர், பாரதி போன்ற கவியரசர் வாழ்ந்த பாரதம்; செழியன், வளவன், சேரன், அசோகன் போன்ற நீதிமன்னரின் பாரதம்; இராம கிருஷ்ணாதிகள் அவதரித்து அரக்கரை அழித்து, அறத்தை நாட்டிய பாரதம்; கரிகாலன், சிவாஜி, ராணாபிரதாப், குரு கோவிந்தன், நேதாஜீ போன்ற வீரர் இரத்தம் ஊற்றி வளர்த்த பாரதம்—இதைப் பாதுகாக்க உடல் பொருள் ஆவியெல்லாம் பலிதான மாக்குவோம். நமது நாட்டை அழிக்கவரும் அதர்மப் பகைவரை அமர்க்களத்தில் எதிர்த்து வெல்வோம். அத்தகைய வெற்றிக்கு ஆக்கமளிக்கவே இந்தப் பாடல்கள் எழுந்தன. பெயர்களைக் குறிக்காமல் எக்காலத்திற்கும் பொதுவாக எல்லாரும் எப்போதும் பாடிப் பயன்பெறும்படி இப்பாடல்கள் அமைந்துள்ளன.

இப்பாடல்கள் அகில இந்திய ஆகாச வாணியின் வேண்டுகோளாலும், டில்லி சங்கீத நாடக சங்கத் தூண்டுதலாலும் எழுந்தன. இவை பல அரங்குகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. வானொலியில் ஒவ்வொரு நாளும் வருகின்றன. ஜய ஜவான் என்ற எனது இசை நாடகம் ஒலிபரப்பிய இந்நாளில், சிங்க நாதம் பொதுநல வீரருக்கு வழங்கப் படுகிறது.

இப்பாடல்களை, பாரதகண ராஜ்யத்திற்கே அர்ப்பணிக்கிறேன். பாரத நாட்டுப் பாதுகாப்பிற்கு எத்தனையோ வள்ளல்கள் பொன்னும் பொருளும் அள்ளித் தருகின்றனர். பாரத சக்திக்கே பலிதானமாகிப் பேனா முனையில் வாழும் கவியோகியிடம் உள்ளது வாக்குத்தான். பாரதப் பாதுகாப்பு, பணத்தாலும் படையாலும் நடப்பதற்குப் பாட்டுத் திறனும் வேண்டும். அந்தப் பாட்டுத் திறனை சிங்க நாதமாகத் தருகிறேன்: பாரத சக்தியின் பேரிகை முழங்குக!

ஆத்ம சக்திக் கனல்

ஆத்ம சக்திக் கனலைத் தூண்டுவோம்
அன்புலகை ஆள வேண்டுவோம்
பூத்தகாலைப் புன்னகையுடன்
போர்க் களத்தை யினிது தாண்டுவோம்.
வீரருக்கு வீறு நேருமே
வினையின் வேள்வி வெற்றி சேருமே
பாரதத்தின் பகை கவிழுமே
பந்த மெல்லாம் சிந்திப் போகுமே.
உலக மெல்லாம் ஒன்று சேருமே.
உலகச் செல்வம் பொதுமையாகுமே
கலகப் பேய் கலங்கி மாளுமே
கனிந்த யோக சக்தி யாளுமே.
உழைப்பவர் பிழைத்த லாகுமே
உண்மையான வண்மை யோங்குமே
தழைத்த செல்வம் தானமாகுமே
தனியுடைமை ஈனமாகுமே.
கெடுத லெல்லாம் கெட்டு வீழுமே
கேண்மை கொண்ட ஆண்மை யாளுமே
விடுதலை விளங்கி வாழுமே
வீரசக்தி விளைந்து சூழுமே.
சிங்கநாத கர்ஜனை செய்வோம்
சிகரம் போலத் தலைநிமிருவோம்
மங்கல முரசு கொட்டுவோம்
மாசிலாத வாழ்வை எட்டுவோம்.

24-3-63

சுத்தானந்த பாரதி

சுத்தானந்தரின்

சிங்கநாதம்,

* * *

1. ஜய ஜய கீதம்.

(குந்தலவராலி—ஆதிதாளம்)

பல்லவி

ஜய ஜய ஹிந்தென சிங்கநாதம் செய்வோம்
ஜெய சுப மலர் பெய்வோம்—ஜய (ஜய)

அனுபல்லவி

பயம்இனி இல்லை பந்தம் இல்லை
பரமானந்தச் சுதந்தரத் தினிலே (ஜய)

சரணங்கள்

அடிமை விலங்கை அறுத்தோம்—பாழும்
மடமை யிருளைச் சிதைத்தோம்
இடியும் புயலும் கொடிய சிறையும்
எமனும் குமைய அமைதி கண்டோம் (ஜய)

பிச்சை வாழ்வை வெறுத்தோம்—மனப்
பிழைகளை வேரறுத் தோம்
அச்ச மற்ற அமர நிலையில்
அறிவுந் திருவும் அமுதும் உண்டோம் (ஜய)

மத வெறிக ளின்றி—இங்கே
மன் னுயிர்கள் ஒன்றி
இதய வெளியில் இறைவ னுடனே
ஏக போக யோகந் துய்த்தோம். (ஜய)

2. பாரத கண ராஜ்யம்.

(கல்யாணி—ஆதி)

பல்லவி

பாரத கண ராஜ்யம் வாழ்கவே
பரமா னந்த சிகர ஜோதியாய் (பா)

அனுபல்லவி

வீர தீர சூரர் வணங்க
வேத முரசு வெற்றி முழங்க (பா)

சரணம்

உரிமை யோங்கி ஒருமை யோங்கி
உண்மை யோங்கி வண்மை யோங்கி
அரிய கல்வி செல்வ மோங்கி
ஆத்ம சக்தி யமுத மோங்கி (பா)

பஞ்ச மின்றி நோய்க ளின்றி
பாலுந் தேனும் பாகும் பொழிய
வஞ்ச மின்றி நஞ்ச மின்றி
வறுமை மடமை அடிமை யின்றி (பா)

சொல்லுஞ் செயலும் நல்ல நினைவும்
சுதியும் இசையும் பதமும் போலே
எல்லாரும் எல்லார்க்கும் இன்ப மோங்கவே
ஏகரச மான அன்பு தாங்கியே (பா)

---

3. தேசப் பரவசம்.

பாரத தேச மென்றால்—இன்பப்
பரவசம் பிறக்குதொர் அறிவினிலே
வீரர்கள் காத்த நிலம்—ஞான
வித்தகச் சித்தர்கள் விளங்கு நிலம்

தீரர்கள் ஆண்ட நிலம்—நல்ல
செல்வமும் கல்வியும் செழித்த நிலம்
பாரினர் வணங்கு நிலம்—தெய்வ
பக்தர் மனமுருகப் பாடு நிலம்!

முப்புறம் கடல் முரசம்—கன்னி
முனை முதல் கௌரியின் முடி வரையில்,
எப்புறம் பார்த்தாலும்—பச்சை
இயல்வளங் குலுங்கிடும் இனிய நிலம்!

கப்பல்கள் சூழ்ந்த நிலம்—கடற்
கரையெல்லாம் பொன்மணி கனலு நிலம்
ஒப்பறு திருத்தலங்கள்—சுற்றி
ஓமென நதிதவழ்ந் தோடு நிலம்!

முப்புரம் எரித்த விழி—தீயர்
மூய்ந்திடப் பாய்ந்திடும் சுடராழி!
தப்பறு கோதண்டம்—வீர
ஜயம்பெறும் விஜயனின் காண்டீபம்,

ஒப்பறு முனிவர் தவம்—ஹரி
ஓம் என இசைத்திடும் வேத ஒலி
செப்பரு யோக வொளி—வளர்
திருமிகக் காத்திடும் தெய்வ நிலம்!

பாரத தேசமென்றால்—வீரப்
பரவசம் பெருகுதெம் உயிரினிலே!

---

4. இந்தியா எங்கள் உடல்.

(காபி ராகம்—ஆதிதாளம்)

இந்திய நாடெங்கள் உடலே—வெள்ளி
இமயமலை எங்கள் முடியே
விந்திய மலையெங்கள் இடையே—கீழ்
மேல்தொடர் எந்திருக் கரங்கள்

கங்கையும் சிந்துவும் ஜடைகள்—தென்
கன்னிமுனை யெங்கள் அடிகள்
பொங்கிடுங் காவிரி விமலை—எங்கள்
பொன்னொளிர் பூமணி யாரம்! (இந்)

கண்குளிர் கற்பக வனமே—இன்பக்
கவிரசம் பொழிந்திடும் வளமே
மண்குளிர் மங்கலத் திருவே—எங்கள்
மனங்குளிர் ஆனந்த வுருவே! (இந்)

கருணைக் குழலிசைக்கும் பண்ணே—இந்தக்
காசினி போற்றிடும் விண்ணே
மரண பயமொழிக்கும் மருந்தே—கலை
மல்கிய பேரின்ப விருந்தே! (இந்)

கீதையும் குறளுமெம் வேதம்—உள்ளக்
கிளர்ச்சி களே சங்க நாதம்....
தீதையும் சூதையும் ஒழித்தே—நன்மை
செய் தவமே எங்கள் போதம்.... (இந்)

கற்பனைக் கினியநல் லழகு—கவி
களித்திடும் கனவுடன் பழகும்
சிற்பத்தின் அற்புதக் கோயில்—ஞானச்
சிகரத்தில் விளங்கிடுந் தாயில்.... (இந்)

மந்திரப் புலவரின் வேதம்—வளர்
மலை நதி வளங்களில் கீதம்....
யந்திரத் தொழில்களின் முழக்கம்—அள்ளி
ஈவதெம் வளமையின் வழக்கம்.... (இந்)

கடலெல்லாம் கப்பலின் கூட்டம்—இதன்
கரையெல்லாம் செல்வத்தின் ஈட்டம்....
உடலெல்லாம் வீரத்தின் ஓட்டம்—இதன்
உயிரெல்லாம் ஓம்சக்தி யாட்டம்.... (இந்)

அந்தணர் உள்ளமும் அறிவும்—வீரர்
ஆண்மையும் ஆயிரந் தொழிலும்
சிந்தை மகிழ்ந்திடும் தொண்டும்—எங்கள்
ஜீவன விரதமாய்க் கொண்டோம்.... (இந்)

ஒவ்வொரு மனிதனும் நாமே—நாம்
ஒவ்வொரு மனிதனும் ஆவோம்....
இவ்வுல காலய மாமே—அதில்
இன்னுயிர்க் கூட்டமே இறைவன்....

உண்பதும் இந்திய உணவே—நாம்
உடுப்பதும் இந்திய வுடையே....
எண்ணுவ திந்திய நலமே—இந்த
இணைப்பினில் உள்ளது பலமே.... (இந்)

---

5. எங்கள் வள நாடு.

சிவனிருக்கும் இமயமலை எங்கள் வள நாடு
திருமாலின் ஏழுமலை எங்கள் வள நாடு
தவமுனிவர் பொதிகை மலை எங்கள் வள நாடு
சண்முகனர் பழநிமலை எங்கள் வள நாடு
கங்கை வளர் பச்சை நிலம் எங்கள் வள நாடு
காவிரியின் பூப்பொழில்கள் எங்கள் வள நாடு
சிங்கம் வளர் மறவர் நிலம் எங்கள் வள நாடு
சீதேவி வாழு நிலம் எங்கள் வள நாடு
முத்திறைக்கும் துறைமுகங்கள் எங்கள் வள நாடு
மூலசக்தி தவம் புரியும் எங்கள் வள நாடு
எத்திசையும் அருள் மணக்கும் எங்கள் வள நாடு
எல்லையில்லாப் பொருள் குவியும் எங்கள் வள நாடு
சோகமில்லா முனிவர் நிலம் எங்கள் வள நாடு
தொழிலாளர் ஆளு நிலம் எங்கள் வள நாடு
வாகைமலி வீரர் நிலம் எங்கள் வள நாடு
வள்ளுவரின் வேதம் வளர் எங்கள் வள நாடு
கொடை வளரும் செல்வர் நிலம் எங்கள் வள நாடு
கொலைமறுக்கும் சைவர் நிலம் எங்கள் வள நாடு
கடவு ளுணர் கலை குலுங்கும் எங்கள் வள நாடு
கற்பொளிரும் மாதர் நிலம் எங்கள் வள நாடு

---

6. புண்ணிய பாரத தேசம்.

புண்ணிய பாரத தேசம்—நாம்
போற்றிடும் இன்பச் சுதேசம்....
கண்ணெனக் காத்திடு வோமே—நம்
கைகளால் தொண்டுசெய் வோமே.

முப்புர முங்கட லோசை—பொன்
முந்து மணித்திரள் கொண்டே
கப்பல் வருவதைக் காணாய்—எங்குங்
கைத்தொழில் பாட்டினைக் கேளாய்.

ஓங்கி வளரு மலைகள்——'ஓம்
ஓ'மெனத் தாவு நதிகள்
தேங்கனிச் சோலையில் ஆடும்—இளந்
தென்றலில் வேதங்கள் பாடும்

இந்தியா எங்களின் இன்பம்—இதில்
என்றும் தவக்கனல் விளங்கும்;
வந்தே மாதரம் ஜேஹிந்த்—தென்று
வாழ்த்தி வணங்குவோம் வாரீர்!

---

7. எந்தாய் வாழ்க.

(இராகம்-நவரோஜ். — தாளம்-ஆதி)

எந்தாய் வாழ்கெனும் மந்திர நாதமே
இன்பத்தை ஊட்டுதம்மா—எங்கள்
இந்தியப் பாசுரத் தென்றல்வந் திதயத்தின்
தந்தியை மீட்டுதம்மா! (எந்)

அன்னை இயற்கையின் புன்னகை அழகினில்
அமுதஞ் சுரக்குதம்மா—அவள்
வன்ன மலைநதி வனங்களில் ஆனந்த
ஞானம் பிறக்குதம்மா! (எந்)

தென்மொழி வடமொழி தேனமு துண்டதும்
சித்தம் குளிருதம்மா—மிக
உன்னதக் கவிகளின் சன்னத வாக்கிலெம்
உள்ளந் தவழுதம்மா! (எந்)

மாதரின் கற்பொளி மாண்டிட வாழ்வினை
மங்கல மாக்குதம்மா........!
காதலர் உயிருயிர் கலந்தநல் இன்பமும்
கடவுளைக் காட்டுதம்மா! (எந்)

சாதி மதநிற பேதமில் லாதொரு
சமரஸங் காணுதம்மா,
ஆதவன் வட்டத்தில் அமைதிர்க் கணமென
ஆருயிர் சேருதம்மா! (எந்)

---

8. ஞானபூமி.

(இராகம்-பூர்வகல்யாணி. தாளம்-ரூபகம்)

ஞான பூமிநீ—வீறு
நல்கும் சக்திநீ
தேனும் பாலுந் தீங்கனியும்
செழித்த இந்தியா!

இருளும் அச்சமும்—போக்கும்
இரவி வாழ்க நீ!
அருளும் அறிவும் அன்பு மீயும்
அனந்த சக்தி நீ! (ஞான)

அருமை யாவுநீ—எங்கள்
ஆருயிரும் நீ
பெருமை யான கலைவளங்கள்
பெருகு செல்வி நீ! (ஞான)

புண்ணி யங்களே—வளர்
போக பூமிநீ—உன்னை
எண்ண எண்ண எங்கள் உள்ளம்
இன்பம் ஊறுதே!

---

9. போற்றி செய்வோம்.

(காபி ராகம்—ஆதிதாளம்)

போற்றி செய்வோம்; புதுமலர் தூவி,
புண்ணி யப்புகழ் பாடிப் பணிவோம்!
நாற் றிசைக்கலே வாணருங் கூடி,
நமது தாய்த்திருத் தொண்டுகள் செய்வோம்! (போ)

வேத வாணியும் பாரத தேவி,
வீர துர்க்கையும் பாரத தேவி,
மாத வக்கனல் பாரத தேவி,
மங்க லத்திரு பாரத தேவி.... (போ)

சேது தொட்டிம யம்வரை நீண்ட
தெய்வ நாட்டினள் பாரத தேவி,
மோது தென்கடல் முன்வளர்ந் தோங்கும்
மூல சக்தியும் பாரத தேவி.... (போ)

வீரர் வீரமும் பாரத தேவி,
விஜய லட்சுமி பாரத தேவி,
பாரின் அன்னையும் பாரத தேவி,
பாது காவலும் பாரத தேவி.... (போ)

கோடி கோடிச் சிரங்கள் வணங்க,
கோடி கோடிக் கரந்தொழு தேத்தக்
கோடி தேவர்கள் ஆசிகள் கூறக்
கொலு விருப்பவள் பாரத தேவி!

---

10. நானிலத்தின் மேனிலம்.

(மாண்டு—ஆதிதாளம்)

நானி லத்தின் மேனிலம்
நமது ஹிந்துஸ் தானம்
நமது ஹிந்துஸ் தானம்—இதன்
நாமம் அமுத பானம்!

தேனும் பாலும் கன்னலும்
செழித்த தேவ லோகம்
செழித்த தேவ லோகம்—இதன்
சேவை எங்கள் மோகம்.

முப்புறமும் வாழி கூறி
முத்திரைக்கும் வாழி—செல்வக்
கப்பல் ஓடும் ஆழி—மனக்
கவலை போக்கும் ஆழி—

எப்புறமும் அழகும் கலையும்
அருளும் பொலியு நாடே—உண்மை
அறம் விளங்கும் வீடே—எங்கள்
அன்னைக் குண்டோ ஈடே.

இந்தியாவை எண்ண எண்ண
எம்முளம் சிலிர்க்கும்—சக்தி
ஏறி வீரம் குதிக்கும்—அஞ்சி
எதிரி யுள்ளம் பதைக்கும்.

வந்தே மாதரம் என்றன்பு
மந்த்ர பேரி வீறும்—விண்ணும்
மண்ணும் ஆசி கூறும்—தெய்வ
வரங்க ளெல்லாம் சேரும்.

---

11. ஜய பாரத

(தேவகாந்தாரி—ஆதிதாளம்)

பல்லவி

ஜயஜய பாரத சக்தி—ஓம்
ஜகஜ்ஜனனீ—ஜயஜய ஹே (ஜய)

அனுபல்லவி

இயல்வளம் செயல்வளம் இன்னிய கலைவளம்
உயர்தவ வளங்களும் ஓங்கிய சுந்தரி (ஜய)

சரணம்

கோடி கோடிஅறி வாளர் வணங்கிடக்
கோடி கோடிக்கரம் கும்பிட்டு நின்றிடக்
கோடி கோடிக்குரல் பாடிப் பரவிட
குவலயம் போற்றிடு நவயுக கல்யாணி (ஜய)

கலைமகளே செல்வத் திருமகளே வெள்ளி
மலைமகளே வீர மஹாகாளி ஜய (ஜய)

வாக்கினில் வித்தை
மனதினில் பக்தி
நெஞ்சத்தில் கோயில்கொள்
செஞ்சுடர் சக்தி

தோள்களில் பலமும் சுதந்தர நலமும்
நீளிசைக் கொடியும் ஆளிசை நாயகி (ஜய)

---

12. ஜயம் ஜயம்

(கானடா—திஸ்ர ஏகம்)

ஜயம் ஜயம் பெருகவே—எம்
ஜன்ம பூமி வாழ்கவே
துடர் கெடச் சுதந்தரச்
சுடர் நகை துலங்கவே! (ஜ)

நீர் வளம் நிலவளம்
நிகரிலாக் கலை வளம்
ஊர் வளம் உயிர் வளம்
உயர் வளங்கள் ஓங்கியே! (ஜ)

தீத்தணல் பறந்திடும்
தியாக வேள்விக் குண்டமே
சாத்விக பலத்தினுற்
சகத்தை ஆளும் கண்டமே! (ஜ)

---

13. புண்ணியர் நாடே.

(தேஷ்—ஆதிதாளம்)

புண்ணியர் நாடே, பூரணர் நாடே!
புகழ்மிகு பாரத நாடே!
விண்ணெளிர் நாடே, வித்தகர் நாடே!
விதவித வளந்தரு நாடே! (பு)

மாரதர் பலமும், வங்கரின் கலையும்,
மங்கலத் தமிழிசை யமுதும்,
சீரிய சிங்கரின் வீறுடன் கூர்ச்சரர்
செல்வமும் மல்கிய நாடே! (பு)

புத்தரின் சாந்தப் புன்னகை யொளியும்,
பூரண யோகியர் கனலும்,
சித்தரின் அறிவும், பக்தரின் அன்பும்,
தீரரின் வீரமும் பொலியும் (பு)

எம்முளந் துடிக்கும் இன்னுயிர் நாடே!
எம்விழிக் கொளிதரும் நாடே!
எம்மனம் நிம்மதி யெய்துநன் னாடே!
எங்களை யீன்றபொன் னாடே! (பு)

---

14. பாரத தேசம்.

(திலங் — ரூபகதாளம்)

பல்லவி

பாரத தேசம்—எங்கள்—பாரத தேசம்—வாழ்க (பா)

அனுபல்லவி

பூரணர் புகழுகின்ற புண்ணிய தேசம்
பொன்னும் மணியும் புனித வளமும்
பொலியும் சுதேசம் (பா)

சரணம்

அறமும் பொருளும் இன்ப வீடும்
அளிக்கும் பாரதம்
திறமை கொண்ட தீரர் போற்றும்
தெய்வ நாடிதே (பா)

மனிதர் தம்மை அமர ராக்க
வல்ல யோகமும்—
இனிய போகக் கலையும் இலகும்
இன்ப நாடிதே. (பா)

போட்டி போர் பொருமை யின்றிப்
பொதுநல உரிமை
காட்டி ஆன்ம நேய மூட்டும்
கருணை நாடிதே. (பா)

---

15. வாழிய பாரதமே!

வாழிய பாரதமே—நாங்கள்
வாழ்திருத் தாய் நிலமே
ஆழியும் வானமும் பூமியும் போலவே
வாழி சுதேச நலம்—என்றும் (வா)

பாரில் உயர்ந்த நிலம்—தங்கப்
பச்சை செழித்த நிலம்
பூரண யோகமும் போகமும் போற்றிடும்
புண்ணிய விண்ணகமே. (வா)

ஆனந்த வேத நிலம்—மலை
ஆறுகள் பாடு நிலம்
தேன்பொழி சோலையில் ஞானக் குயிலோசை
தென்றலைக் கொஞ்சு நிலம். (வா)

வண்மை மிகுந்த நிலம்—அருள்
வாக்கு மலர்ந்த நிலம் [றிய
பெண்மையு மாண்மையும் கண்கருத் தொன்
பேரின்பக் காதல் நிலம். (வா)

கொள்ளக் கொள்ளக் குறையா—நிதி
கொட்டிக் குலுங்கு நிலம்;
தெள்ளிய கல்வியும் தெய்வக் கலைகளுய்,
சேர்ந்து வளர்ந்த நிலம் (வா)

வெள்ளி மலைப் பரமன்—கடல்முனை
வீற்றிருக்கும் குமரி
அள்ளியள்ளி யருட் சக்தி யளித்திடும்
ஆனந்த மான நிலம்—என்றும் (வா)

16. பொலிக! பொலிக!!

(குந்தலவராலி—ஜம்பை தாளம்)

பல்லவி

பொலிக பொலிக புதிய பாரதம்
போக யோக பூமி யாகவே (பொ)

அனுபல்லவி

கலையும் தொழிலும் கனக வளமும்
கனிந்த தேனும் பாலும் பொழியவே (பொ)

சரணம்

இதயம் பொங்கும் இளைய காதல்
இன்பம் ஓங்கியே
இருள் அடிமை அச்ச மின்றி
அருள் விளங்கவே
உதய சாந்த மங்களம் ஒளிர வாழ்விலே,
உலக மெல்லாம் கலக மின்றி
ஒன்று பட்டு நன்று வாழப் (பொ)

17. துந்துமி முழங்கிடுவோம்.

(சுருட்டி—ஆதிதாளம்)

பல்லவி

துந்துமி முழங்கிடுவோம்—ஓம்
ஜயஜய பாரத சக்தி ஜயம் என்றே (து)

அனுபல்லவி

இந்தியர் கிருஸ்துவர் இஸ்லாம் சகோதரர்
எல்லாரும் எல்லார்க்கும்
இன்புற வாழ்க என்றே (து)

சரணம்

தேசமே நம் உடல் தேசமே நம் உயிர்
தேசத் திருத்தொண்டே
தெய்வத் திருத்தொண்டாம்
நேசமும் பாசமும் வீரா வேசமும்
தேச நலம்; அதுவே தியாக பலம் எனவே (து)

---

18. நாமே பாரத நாடு.

(சிந்துபைரவி—ஆதிதாளம்)

பல்லவி

நாமே பாரத நாடு—நம்
வாழ்வதன் பண்பாடு (நா)

அனுபல்லவி

ஹேம கூடமே மகுடம்
இமய சிவசக்தி முகமே
நேம நிட்டைவளர் முனிவர்—கண்ட
நிமல ஞால மெங்கள் உள்ளம் (நா)

சரணம்

கங்கை சிந்து நீள் கரங்கள்
காவிரி விமலை ஆரங்கள்
துங்க விந்தியம் இடையே—இரு
தொடர்களும் எங்கள் தொடையே
தென்முனை பாதம் சிங்களம் போது
பொன்மணி யணிகள் பொங்கிடும் வளமே
முக்கடல் முரசம் முழங்கியெம் புகழை
தக்கட தகவெனத் தாண்டவ மாடும் (நா)

---

19. எங்கள் கோயில்.

(புரநீர்மை—ஆதிதாளம்)

பொன் னிலங்கிடும் புண்ணியக் கோயில்
போற்றி பாரத மாமணிக் கோயில்
மன்னுலகு வணங்கிநின் றேத்தும்
மாசி லாத தவம்வளர் கோயில் (பொ)

விண்ணைக் கொஞ்சிடும் வெள்ளிச் சிகரம்
வெற்றி கூற விளங்கிடுங் கோயில்
கண்ணைக் கொஞ்சும் கவின்பெருங் கோயில்
கங்கை காவிரி பொங்கிடுங் கோயில் (பொ)
கலைகள் ஆயிரம் கட்டிய கோயில்
கவிகள் ஆயிரம் பாடிய கோயில்
அலைகடல் முர சார்த்திடுங் கோயில்
அன்புத் தெய்வம் அமர்திருக் கோயில் (பொ)
சொல்லும் செய்கையும் ஒன்றிய தூய
தொண்டு செய்யும் சுதந்தரக் கோயில்
வெல்லும் வீறு வழங்கிடும் கோயில்
வித்தகர் சொலும் சத்தியக் கோயில் (பொ)

20. தாய் வணக்கம்.

(பிலகரி—ஆதி)

போற்றி போற்றி பராசக்தி தாயே
புதல்வர் செய்திடும் பூசனை கொள்வாய்
ஆற்ற லும்அறி வுந்திரு வோங்கும்
ஆத்ம சக்தியும் ஆயுளும் ஈவாய். (போ)
அன்னை ஓம்சக்தி என்கிற போதே
அமுதம் ஊறுமெம் ஆவியி னுள்ளே
மின்னைப் போலஉன் அன்புமின் ஸாரம்
வினையில் வெற்றி விளக்கிடுந் தாயே. (போ)
சிங்க நெஞ்சும், சிலையெனத் தோளும்,
தீர வீர பராக்ரம வாழ்வும்
தங்க மேனியும் சத்திய வாக்கும்,
தரும சித்தியும் தந்தெமை யாளாய். (போ)
எங்கு நோக்கினும் உன்முகங் காணும்
இன்பம் வேண்டும், இதய விளக்கே
பொங்கும் ஆனந்தப் புன்னகைத் தேனே!
பூங்கை ஆசி பொழிந்தெமைக் காவாய்! (போ)

21. அன்னை வாழ்க!

(செஞ்சுருட்டி—திஸ்ர ஏகதாளம்)

காலை யிளம் பரிதியைப்போல்
கனிந்த நகை முகமும்,
கட்டழகு சொட்டுகின்ற
கலை வடிவுங் கொண்டே,
சோலை வளங் குலுங்குகின்ற
சோதி மலை மீதே
துலங்கு கின்றாள் எங்க ளன்னை
நலங்க ளெல்லாம் வழங்க!

கள்ளுமி ழும் பூமணத்தை
அள்ளி வருந் தென்றல்,
கனியருந்திக் கவி பாடும்
கட்ட றியாப் புட்கள்,
தெள்ளிய ஓங் காரமிசை
தேனருவி போலே
தெய்வமறை முழங்கு கின்றாள்
உய்வருளும் அன்னை!

கண்ணன் குழல் கேட்டுருகக்
கந்தன் மயில் ஆடக்
காவிரி யாழ் மீட்டுகின்றாள்
கலை வளருங் கையால்;
தண்கடல்பல் லாண்டி சைத்தே
தாவி முர சடிக்கத்
தாயமுதம் விளங்கு கின்றாள்
சேய்க ளெல்லாம் பணிவோம்

வரங்க ளெல்லாம் வழங்கு கின்ருள்
கரங்க ளெல்லாம் குவிப்போம்;
வாழி எந்தாய் வாழி யென்றே;
வன மலர்கள் சொரிவோம்!
சிரங்க ளெல்லாம் ஒற்றுமையாய்ச்
சேர்ந்து பணிந் திடுவோம்;
திசைக ளெல்லாம் எதிரொலிக்க
ஜெய முழக்கம் செய்வோம்!

---

22. சக்தி அன்னே.

பாரத சக்தி யன்னே—இந்தப்
பாரினுக் கரசியவள்,
வீர மஹா காளி—ஓம்சக்தி
வெற்றித் திருமகளே!

அறமென வுரு வெடுத்தாள்—தாய்
அன்பென விளங்கு கின்ருள்,
மறமலி யரக்கர் கெடத்—திரு
மாலென வில்லெடுத்தாள்!

மோகன முரளி யிலே—வாணி
முழங்கிடும் வீணையிலே,
பாகெனக் கவி பொழிவாள்—தேன்
பாலெனச் சுவை தருவாள்!

சிந்தையிற் சிவ முடையாள்—வீரச்
செங்கையில் விசையுடையாள்,
அந்தண மனமுடையாள்—ஆண்மை
அளித்திடுங் கன லுடையாள்!

எண்ணத்தில் இனி திருப்பாள்—உயிர்
இதயத்தி லேதுடிப் பாள்,
கண்மணிக் கொளி தருவாள்—கோடிக்
காட்சியி லேவரு வாள்!

உலகினும் வயதுடையாள்—இளம்
ஒளிவளர் கன்னி யிவள்,
மலையினும் மாண் புடையாள்—நீல
வானினும் விரி வுடையாள் !

---

23. பூரண சக்தி.

புண்ணிய மாகிய வாழ்க்கையும்—பரி
பூரண மாகிய சக்தியும்,

எண்ணிய எண்ணங்கள் யாவையும்—வெற்றி
எய்துந் திறமையும் வேண்டினேன்.

கந்தன், முருகன், குகனைப்போல்—நெற்றிக்
கண்ணன் போல் சக்திக் கனலுடன்

சுந்தர ராமனின் வீரமும்—அருள்
சுத்த சுதந்தர சாமியே—

மாதவன் போலொரு யோகமும்—பார்த்தன்
மாதிரி வெற்றித் திறமையும்,

ஆதவன் போலப் பொலிவுடன்—அருள்
ஆத்ம சமானக் கடவுளே....

புத்தனைப் போலத் துறவுடன்—மேரி
புத்திரன் போலப் பொறுமையும்,

சத்திய காந்தியைப் போலவே—தியாக
சாதன வாழ்க்கையுந் தந்தருள்.

அப்பரைப் போலே அருட்பணி—நம்
ஆழ்வாரைப் போலத் தவநிலை

இப்பொழு தேயெனக் கீகுவாய்—என்
இதயக் கமலக் கடவுளே.

---

24. அகில பாரதத்தில்

பாரதர் ஓர் குலம்
பாரதம் தாய்நிலம்
பாரத சக்தியே
பார்நலம், நம் பலம்
அகில பார தத்தில் வாழும்
யாவரும் சமானமே
ஆரியர் திராவிடர் இஸ்
லாமியர் கிறிஸ்துவர்
அகில உலகக் கோயி லெங்கும்
அன்பு கொண்டு வாழுவோம்!
பகைமை அச்சம் அடிமையின்றிப்
பந்த தொந்த மின்றியே
பரம சக்தி மைந்த ராக
உரிமை கொண்டு வாழுவோம்.

எல்லாங் கடவுள் என்று சொல்லும்
இந்து தர்ம வேதமே
இறைவனே பெரியன் என்னும்
இஸ்லாமிய வேதமே
நல்ல சேவை யால் விளங்கும்
கிறிஸ்த வமும் பௌத்தமும்
அல்லல் போக்கி அமைதி யாக்கும்
ஆத்மானந்த யோகமே.

மாரி போலத் தென்றல் போல
மலை யருவி போலவே
சூரியன் போல் சந்திரன் போல்
சூழு நல் லியற்கை போல்
ஒருலகில் ஓரகமில்
லாது மாந்தர் வாழுவோம்
ஆருயிரை அழகு பூத்த
அன்புச் சோலை யாக்குவோம்!

25. தேவி சக்தி

(கமாஸ்—ரூபகம்)

தேவி சக்தி பாரதியின்
செல்வர் நாங்கள் யாவரும்—எங்கள்
ஆவி யாக்கை செய்கை யெல்லாம்
அவள் பணிக்கென் றீந்தனம்.

அன்னை என்ற போதி லுள்ளம்
அன்பு வெள்ளம் ஓடுமே
உன்னதப் பரவ சத்தில்
உள்ளந் துள்ளியாடுமே.

அமுத மான புன்னகை
யழகு பூத்த சுந்தரி
குமுத மான செங்கண்ணாள்
குளிர்ந்த பார்வை கொண்டவள்.

தங்க மான நல்லணி
தழைத்த பச்சை மேனியாள்
சிங்கம் போல மைந்த ருக்குத்
திண்மை நல்கும் தியனாள்.

அரக்கரின் கொழுப்பினை
அடக்கிடும் பயங்கரி
மறக் கருணை கொண்ட சண்டி
மங்கலத் திருமகள்.

பற்றி நிற்கும் பக்த ருக்குச்
சக்தி நல்கும் பாரதி
வெற்றி வீறு பெற்ற தாய்
விஜய சக்தி வாழ்கவே.

26. சக்கரக்கண்ணனே வா !

(பைரவி—ஆதிதாளம்)

சக்கரக் கண்ணனே வா வா—எங்கள்
சங்கடந் தீர் துணை தாதா
மிக்கவும் வருந்தி மெலிந்தனம் ஐயா
மேதினி காக்கப் போதிது துய்யா (சக்)

(ரூபகம்)

பாரதப் போரினிலே—வீரப்
பார்த்தனின் சாரதி யாய்
காரினில் மின்னலென—அமர்ந்தே
கர்ஜித்த கீதையைத் தா (சக்)

வஞ்ச நராசுரனை—வதைத்த
வலிய கரங்களினால்
பஞ்சப் பகாசுரனை—ஒழித்தே
பால்வளம் பொங்க வருள் (சக்)

பத்தினி பாஞ்சாலி—மானம்
பாது காத்த பரமா !
கைத் தொழிலை வளர்த்தே—மானங்
காக்க ஓர் ஊக்கமருள் (சக்).

அரவுயர் கொடி யோன்—கொடுமையை
அழித்த காவலனே
அரசியற் சூதர்—மூட்டும்
அதர்மப் போ ரொழிப்பாய் (சக்)

சாதுக்களை வருத்தும்—அரக்கர்
சகத் தினில் வலுத்தார்
மாதுக்கம் போக்கி யருள்—உலகுக்கு
மங்கள நாயகனே. (சக்)

27. எத்தனை வீரர்!

எத்தனை வீரர் இரத்தம் வடித்தனர்
இந்நா டுய்ந்திடவே
எத்தனை சூரர் தூக்கு மேடையில்
ஏறினர் விடுபடவே
எத்தனை வீரர் சிறையினில் வாடி
இதயம் உடைந்தார்கள்
அத்தனை வீரரின் ஆவியும் உனக்கே
அடைக்கலம் உலகன்னை!

எத்தனைக் கவிகள் வறுமையில் வதங்கி
இசைத்தனர் உன் புகழை
எத்தனைப் புலவர் பேனா முனையினுன்
எழி லுருவை வடித்தார்
எத்தனை நாவலர் மேடையி லுன்புகழ்
இயம்பி முரசடித்தார்
அத்தனைப் பேரின் ஆர்வமும் உனக்கே
அர்ப்பணம் உலகன்னை!

முத்துமுத் தாக வேர்வை யுதிர்த்தே
மூலப் பொருள் விளைத்தே
எத்தனை ஏழைகள் உழைத்தன ரிங்கே
இரவு பகலாக
எத்தனை பாட்டாளர் பாடுபட் டுனக்கே
ஈந்தனர் உணவுடையே
அத்தனை பேரின் வேர்வைத் துளிகளும்
ஆரம் உனக்காமே.

வீர விஜயன் சிங்கன் சிவாஜி
வ.வே. ஐயர்
தீரன் திலகன் காந்தி நேரு
சிதம்பரம் முதலா னோர்
பாரதம் வாழ வாழ்வினை யீந்தார்
பாரத சக்தி யன்னை
ஆரதி யுனக்கெம் ஆவியும் வாழ்வும்
ஆற்ற லளித்திடுவாய்.

28. எங்கள் சுவாசம் இந்தியா.

வந்தே மாதரம் என்றே
வையம் வணங்கு கின்ற
இந்திய தேச மடி—குயிலே
எங்கள் சுவாச மடி. (வந்)

பொன்னும் பசு வளமும்
பொங்கும் கலை வளமும்
மின்னித் தளிர்க்கு தடி—குயிலே
மேனி சிலிர்க்கு தடி. (வந்)

வானெட்டு மலை களும்
வாநதி வளங் களும்
தேன்கொட்டுந் தேச மடி—குயிலே
திருமகள் வாச மடி. (வந்)

காவியச் செல்வ நலம்
ஓவியச் செல்வ நலம்
மேவிய நாடி துவே—இதன்
வீரத்திற் கீடே துவே. (வந்)

அல்லற் படும் உலகை
அன்பு வழி நடத்தும்
நல்ல உலக மடி—குயிலே
ஞானத் திலக மடி. (வந்)

ஒற்றுமைப் பேரி கையை
ஓங்கி முழங்கி யிதன்
வெற்றிக் குழைத்திடு வோம்—குயிலே
வீரஞ் செழித்திடு வோம். (வந்)

---

29. ஜய பாரதக்கொடி.

ஜய பாரதக் கொடி வாழிய
ஜயஹோ ஜயஜயஹோ....
ஜயஹிந்தென ஆர்ப்போம். (ஜய)

ஒற்றுமை யாய்ப் பணிவோம்—தாயின்
ஓங்கும் ஜயக் கொடியை
வெற்றிகள் கூறிடு வோம்—சுற்றி
வீரநடம் புரி வோம். (ஜய)

செம்பசும் வெண் கொடியே—ஆன்மச்
செல்வத் திருக் கொடியே
அன்பறம் உண்மை வளர்—சக்கரம்
அணி செயும் கொடியே! (ஜய)

சூரிய சந்தி ரர்க்கும்—நமதிசை
சொல்லிப் பறக்குது பார்!
பாரி லிதன் பெருமை—எங்கும்
பரவத் தொண்டு செய்வோம். (ஜய)

இந்த உடலி னிலே—ஒருதுளி
இரத்தம் உள்ள மட்டும்
எந்தாய் வாழ்க வென்றே—இதனை
ஏந்திப் பிடித்திடு வோம். (ஜய)

போர்ப் புயல் வரினும்—பூகம்பப்
புரட்சி கள் வரினும்
கார்ப் புயல் வரினும்—இதனைக்
காத்த லென் கடனே. (ஜய)

அன்னிய மாயத் திற்கும்—இனி
அடிமை யாவ துண்டோ?
தன்னிக ரற்ற பலம்—பெற்ற
சத்திய வீரர்குலம். (ஜய)

எங்கெங்கு புத்த மதம்—பரவி
ஏற்றம் பெரு கிடுமோ
அங்கங்கு நம் மினிய—நாட்டின்
அறம் வளர்வ தென்போம்—எந்தாய்
ஆட்சி புரிவ தென்போம்.

வங்கக் கலைவாணர்—தமிழகம்
வாழும் அருளாளர்
சிங்க மராட்டியர்கள்—சிந்தியர்
சீக்கியர் பாரசீகர். (ஜய)

செல்வக் குசராத்தர்—கோசலர்
தெலுங்கர் கன்னடியர்
நல்ல மலையாளர்—துளுவர்
நம்மவர் யாவருமே.... (ஜய)

எந்த மதத்தினரும்—உலகில்
எந்த வகுப்பினரும்
இந்திய ஜோதியிலே—எல்லாரும்
இணைந்து வாழ்ந்திடுவோம்.... (ஜய)

கண்ணபிரான் கீதை—வள்ளுவர்
கண்ட தமிழ் வேதம்—வழங்கும்
புண்ணியர் வீடுதொறும்—சுபக்கொடி
பொலிந்திடக் காண்போம். (ஜய)

நாட்டை யோர் நாடழிக்கும்—அதர்மத்தை
நாங்கள் இனிப் பொறுக்கோம்
வீட்டை யழிக்க வரும்—கொடியரை
வீமன் எனப் புடைப்போம். (ஜய)

நல்லதை ஆதரிப்போம்—தீமை
நலியப் போர் புரிவோம்
எல்லாரும் இன்புறவே—மணிக்கொடி
ஏற்றிப் பணிந்திடுவோம். (ஜய)

கொடி பறக்குதம்மா—பாரதக்
கொடி பறக்குதம்மா!
துடி துடிக்குதம்மா—ஆவேசம்
துள்ளிப் பெருகுதம்மா! (ஜய)

---

30. சுதந்தர இந்திய கீதம்.

(பேஹாக்—ஆதி)

வீர சுதந்தர பாரதம் வாழ்கவே
வெற்றி முரசொலி விண்ணெட்டச் சூழ்கவே ஜயஜய(வீ)

பூரண ஞானமும், கருமமும் தருமமும்
பொலிந்துவிளங்கிடவே புதுயுகஜோதியாய் ஜயஜய()

கட்டுங் கவலையும் விட்டு விலகின
கண்ணிலும் கருத்திலும் மின்னின புதுயுகம்
எட்டுத் திசையிலும் இசைகள் முழங்கின
ஏற்றுவோம்ஜயக்கொடி போற்றிசுதேசமென்றே()

தொகையரு

இந்தியர் கிறிஸ்துவர் இஸ்லாமியர் பௌத்தர்
எல்லாரும் ஓர்குலம் ஓர் நிகராகவே
சிந்தனைச் சிற்பிகள் யோகவிஞ் ஞானிகள்
சீரிய வீரர்கள் செயமலர் தூவவே (வீ)

அல்லல் ஒழிந்திடும் வல்லர சென்னவே
அகிலமெல்லாம் வணங்கும் அத்யாத்ம சக்தியாய்
எல்லையில் வானமும் இரவியும் கடலும்போல்
எந்நாளும்பொன்னுளாய்இறைவன் திருவருளால்()

---

31. சுதந்தர இந்தியா.

(காபி ராகம்—ஆதிதாளம்)

பல்லாண்டு பல்லாண்டு வாழ்கவே—எங்கள்
பாரத தேசம் பரிதியைப் போலே (பல்)

வல்லர சென்ன வளர்ந்தே—இந்த
வையத்திலே அறம் வாழ உயர்ந்தே
நல்லன யாவையும் சுரந்தே—இன்ப
நாயகியாய் அன்புத் தாயக மாகவே (பல்)

எட்டெட்டுத் திக்கிலும் வீசும்—இவள்
இதயக் கனலின் புதிய சுடரைக்
கட்டுப் படுத்துவார் யாரே—அதைக்
கண்டுணர் தீரர் கடவுளா வாரே (பல்)

அன்னிய மாயங்கள் வருமோ—இனி
அரக்கரின் சூட்சிகள் அச்சந் தருமோ
தன்னிக ரற்றதோர் சக்தி—தன்னைத்
தந்தெமைக் காப்பவள் இந்தியத் தாயே ()

நாசப் பகைக்குலம் வீழ—எல்லா
நாட்டினரும் ஒரு கூட்டுற வாக
ஆசிய ஜோதி விளங்க—என்றும்
அமரத் தன்மைதரும் அன்னைஎம் அன்னை()

அருளினால் உரிமையைப் பெற்றாள்—தன்
ஆத்ம சத்திஉல காண்டிடக் கற்றாள்....
இருளினை ஓட்டிடும் இரவி—எங்கள்
இந்தியத் தாய்வேத மந்திர அருவி (பல்)

---

32. பிறந்த நாடு.

(நாதநாமக்ரியை—ஜம்பை)

பிறந்த நாடு சிறந்து வாழப்
பெருமை நாட்டுவோம்—உண்மை
அறிந்த தியாக வீரர் சூழ
அச்சம் ஓட்டுவோம்! (பிற)

ஏக்க மின்றித் தூக்க மின்றி
இளைய சிங்கங்காள்!—நம்மைத்
தாக்குகின்ற அச்சப் பேயைத்
தகர்த்து வீசுவோம்! (பிற)

தொத்தடிமைத் துயர் பொறுக்கும்
பித்தர் யாரினி?—சொந்தச்
சொத்தை யாளச் சோம்புகின்ற
சொந்தை யாரினி?

வம்பு பேசும் வண்டர் தம்மை
வாயடக்கு வோம்—இங்கே
கம்ப னுண்டு காந்தி யுண்டு
கந்தன் வேலுண்டு (பிற)

தருமத்திற்கு வெற்றியுண்டு
சத்தியம் உண்டு—நல்ல
கரும வீர சக்தியுண்டு
கண்ணன் வாக்குண்டு (பிற)

பந்தமற்ற தெய்வ வாழ்வைப்
பார்த்த நாடிதே—எங்கள்
இந்தியாவுக் கெந்த நாடும்
ஈடு நிற்குமோ? (பிற)

---

33. ஏறுபோல

(மோகனம்—முத்தாளம்)

ஏறுபோலத் தலை நிமிர்
இந்தியாவின் வீரனே
வீறுகொண்டு நட நட
விடுதலை முரசுடன் (ஏறு)

நடுநடுங்கப் பாதகர்
நண்பு கூறச் சாதகர்
கெடுத லெல்லாம் எற்றியே
கீழ்மையை அகற்றியே (ஏறு)

அடிமைக் கட்டு முறிபட
அக்ரமங்கள் சிதறிட
மடமைத் துன்பம் பொடிபட
மங்களங்கள் பொலிவுற (ஏறு)

கரும வேள்வி நிலவிடக்
கட்சிச் சண்டை விலகிட
தரும ராஜ்யம் இலகிட
சாந்த மெங்கும் பரவிட (ஏறு)

காணுங் கண்ணைப் போலவே
கையுங் கையும் போலவே
ஆணும் பெண்ணும் வாழவே
அழகி னின்பம் சூழவே! (ஏறு)

---

34. உன் புகழ் எங்கே?

(கமாஸ்—ரூபகம்)

எங்கு சென்ற துன்புகழ்
இணையி லாத தேசமே?
மங்கலம் இழந்த தேன்?
மலர் முகம் குவிந்ததேன்? (எங்)

யாழிசை தளர்ந்த தேன்?
இடர்களே வளர்ந்த தேன்?
ஊழியையும் வென்றிடும்
உரங்கொள் வீரர் இல்லையோ? (எங்)

கலையில் மிக்க புலவரின்
கவிதை கொண்ட செல்வியே!
உலகி லுன் அருட்சுடர்
உருக் குலைந்து போனதோ? (எங்)

இளம் பெருஞ் செழியனும்
இராச ராச சோழனும்
துளங்கறப் பிடித்த வாள்
துருப்பிடிக்க லானதோ? (எங்)

பாரி லுன் சுதந்தரப்
பதவியை உதவிடத்
தீரனை மற்றொரு
சிவாஜி மன்ன னில்லையோ? (எங்)

35. தடுப்பவர் யார்?

(குந்தலவராளி—திஸ்ர ஏகம்)

தடுப்பவர்கள் யாரினி?—எந்
தாயின் சேவை செய்வதை
விடுப்பவர்கள் யாரினி?
விடுதலை முயற்சியை?

மோகத்தை முனிகுவோம்
முயற்சியை அணிகுவோம்
தியாகத் தீயிலே குதிக்கத்
தாவித் தாவி முன்செல்வோம்

தென்னை வாழை மா பலா
செழுங்கரும்பு நெல்வளம்
அன்னை அள்ளி அள்ளித் தந்தும்
அன்ன மில்லை யென்பதோ?

பொன்னும் சோலைப் பச்சையும்
பொலியு மெங்கள் நாட்டிலே
இன்னமும் வறுமைநோய்
இருப்பதைச் சகிப்பதோ?

உருக்கிய பளிங்குபோல்
ஒளிர்மலை யருவிகள்
நெருக்கமாங் கனிவளம்
நிறைந்த நாடு நம்மதே.

முப்புறமும் எம்மிசை
முழங்கிடுங் கடலிலே
கப்பல்வா ணிகஞ்செயாது
கைகள் கட்டி நிற்பதோ?

சோம்பல்விட் டெழுந்தனம்
சுயமதிப் புணர்ந்தனம்
நாம் பிறந்த நாடிதே
நமக்குரிய வீடிதே!

36. காலம் மாறிப் போனதடா!

காலம் மாறிப் போனதடா
கவலைக் கிடமே ஆனதடா
ஞாலம் அணுவில் நடுங்குதடா
ஞானக் கதிரும் ஒடுங்குதடா.

ஆத்திரச் சண்டை மீறுதடா
ஆணவ மாயம் ஏறுதடா
நாத்திகத் திமிரே வீறுதடா
நான்என தென்றே கூறுதடா.

நாட்டு நன்மையை நாடார்கள்
ஞாலப் புதுமை யறியார்கள்
ஓட்டு வேட்டை யாடுகிறார்
ஓயாக் கட்சிப் போரிடுவோர்.

பட்டம் பதவித் தம்பட்டம்
பணத்தை வீசிச் சூதாட்டம்
ஒட்டும் உறவும் ஒருநாளே
ஓயாச் சண்டை மறுநாளே.

கலையும் காமக் கலகலப்பே
கல்வியும் காசின் சலசலப்பே
வலையின் சிக்கல் வாழ்வெல்லாம்
வறுமைத் துயரம் சூழ்வெல்லாம்.

பஞ்ஜம்பஞ் ஜம்பஞ் ஜம்பமடா
பகட்டு நாடக வஞ்சமடா
கொஞ்சும் மாயச் சேட்டையடா
கொத்தும் பாம்பின் ஆட்டமடா.

சோறு துணிக்கு வகையில்லை
சொகுசுக் கிங்கே குறைவில்லை
ஏறும் விலைகள் இறங்கவில்லை
இங்கும் அங்கும் பலதொல்லை!

வேலை யில்லாத் திண்டாட்டம்
வேடிக் கைக்குக் கொண்டாட்டம்
காலை மாலை களியாட்டம்
கவலை நெஞ்சின் முகவாட்டம்!

கூரை பிடித்த வீட்டினிலே
குடுமி பிடிக்கட்டு மென்றிருப்பார்!
கூறை யாடும் பகை வந்தால்
சூதாட் டம்முடி யட்டுமென்பார்.

ராகெட் விமானம் பறக்குதென்றால்
ராமா யணத்தில் உண்டென்பார்
பாகெட் வானொலி பாடையிலே
பண்டை வம்புக ளாடிடுவார்.

வடக்கே சண்டை வலுக்கையிலே
வரட்டும் தெற்கே எனப்படுப்பார்
மிடுக்காய்ச் சபதம் கூறிடுவார்
வேலை யென்றாற் சீறிடுவார்.

காலம் வேண்டும் மாறுதலைக்
காணார் பழைய கதைசொல்வார்
ஞாலப் புரட்சி வேண்டுமடா....
ஞான விளக்கைத் தூண்டுமடா

37. எத்தனை காலமாய்.

(பிலஹரி—சாபுதாளம்)

எத்தனை காலமாய்
ஏங்கித் தவிக்கின்றோம்—சக்தியன்னை
இத்தின மேனுமுன்
சித்தம் இரங்காதோ—சக்தியன்னை

வீட்டைப் பறிகொடுத்து
வீதியில் நிற்போமோ—சக்தியன்னை
பூட்டிய சிறையினில்
புண்பட்டுத் தவிப்போமோ—சக்தியன்னை

துட்டப் பிசாசுகள்
துரத்தி வரும்போது—சக்தியன்னை
கட்டிய கைகளால்
காரியம் ஆகுமோ—சக்தியன்னை

கைக்கெட்டும் கஞ்சியும்
வாய்க்கெட்ட வில்லையே—சக்தியன்னை
பொய்க்கட்டும் வேற்றுமை
பொல்லாங்கு செய்குதே சக்தியன்னை.

வறுமைக் கபந்தனெம்மை
வாரி விழுங்கவோ—சக்தியன்னை
சிறுமையும் சோம்பலும்
தீரவழி செய்வாய்—சக்தியன்னை.

சொந்த நிலமிருந்தும்
சோற்றுக்குத் தவிக்கின்றோம்-சக்தியன்னை
மந்தம் விலகி
மனத்திட்பம் வாராதோ—சக்தியன்னை.

பொல்லாத ராக்ஷஸர்
பொட்டலடிக்கின்றார்—சக்தியன்னை
நல்லவர் வாழ்வு
நலம்பெறச் செய்தருள்—சக்தியன்னை.

கலகஞ்செய் மாயத்தைக்
கட்டுடன் வீழ்த்துவாய்—சக்தியன்னை
உலகெல்லாம் உன்குலம்
ஓங்கிடத் தயவுசெய்—சக்தியன்னை,

அரக்கரை ஒழித்திடும்.
அவதாரமில்லையோ—சக்தியன்னை
இரக்கமும் ஈகையும்
இல்லையோ உலகிலே—சக்தியன்னை.

கலகமும் துன்பமும்
கண்ணீரும் தீராவோ—சக்தியன்னை
இலகுயிர் வாழ்விலே
இளவேனில் வாராதோ—சக்தியன்னே.

38. காளி உபாசனை.

சிந்து பைரவி] [ஆதி

வீரக்கனல் பெருக வேண்டும்—தோள்
விம்மிப் புடைத்துயர வேண்டும்
பாரைச் சுமந்து புரந்தோங்கும்—சக்தி
பாலித்தருள் ஜய பவானி!

கலக்கந் தவிர்த்து வெற்றி யீவாய்—ஓம்
காளி சரணம் ஜயசண்டி!
அலக்கண் அழிக்கும் அருள் அம்மே—உன்
அன்பர்க் கபஜயமும் உண்டோ!

கொற்ற சிவாஜியைப் போலே—குரு
கோவிந்த சிங்கனைப் போலே
மற்றொரு விஜயனைப் போலே—ரண
மல்லர் படை திரள வேண்டும்

தருமம் செழித்தோங்க வேண்டும்—அ
தருமம் வீழ்ந்துபடவேண்டும்,
கரும யோகமென வாழ்வை—நாங்கள்
கண்ணன் வழி நடத்த வேண்டும்.

மலையைத் தகர்த் தெறியும் புயமும்—எதிர்
மாற்றார் நடுநடுங்கும் உரமும்—வீரக்
கலையில் மிகப்பழகுங் கையும்—உன்
கருணைத் திருநகையும் தாராய்!

கூற்றும் கிட்ட வரலாமோ—அனு
குண்டும் சுட்டெரிக்கலாமே!—உன்
ஆற்றலும் ஆசியுமிருந்தால்—நாங்கள்
அமரத் தன்மையுடன் வாழ்வோம்!

இந்திர வச்சிரத்தைப் போலே—உடல்
இறுகித் திறமையுடன் விளங்க.
கந்தன் போல் அரக்கரை அழிக்க—வெற்றிக்
கனலைத் தருவாய் ஜயகாளீ!

---

39. என்று சமயோகம்

செஞ்சுருட்டி] [ஆதி

என்று சமயோகம் என்று சமயோகம்
என்றுள்ளம் ஏங்குதம்மா—அந்த
ஒன்று கிடைத்தாலே நன்றினி வாழுவோம்!
உண்மையி துண்மை யம்மா! (என்)

பான்மை யிழந்து பதங்கெட்டுப் பாரினர்
பாவிகளானேமே—ஏங்கள்
தேனையிழந்த மலரெனவாடித்
தெருவில் உதிர்ந்தோமே (என்)

பொன்னை யிழந்து, புகழை யிழந்து,
பொறுமை யிழந்து விட்டோம்—தாயே
அன்ன விசாரம் அதுவே விசாரமாய்
அன்பை மறந்து விட்டோம் (என்)

தாயே சுதந்தர தாகந் தணிந்திடத்
தாரகந் தேடுகின்றோம்!—எங்கள்
வாயுந் திறக்க வகையின்றி நிற்கிறோம்...
வாழும் வகை தருவாய்! (என்)

இன்று மனிதர் படுந்துயர் எண்ணில்
இதயம் வெடிக்குதம்மா!—அங்கே
கொன்று குவிக்குங் கொடி பகாசுரர்
கொட்ட மொடுக்கிடுவாய்! (என்)

---

40. விடுதலைத் தெம்மாங்கு.

செஞ்சுருட்டி] [ஆதி

விடுதலை தா அம்மா விடுதலை தா—காளீ
விட்மாட்டோம் உன்னடியே
படுதுயரம் போதுமினி—தாயே
பாராயோ எம்முகத்தை!
மடமையிருள் வறுமையிலே—நாங்கள்
வாடி வதங்குகின்றோம்—இந்தக்
கொடுமை இனியாகுமோ—உன்
குடிகளன்றோ நாங்களெல்லாம் (1)

கண் பார்த்துக் காத்தருள்வாய்—உன்
கைபார்த்துக் கெஞ்சுகிறோம்;
புண் பார்த்துத் தீர்த்திடுவாய்—எங்கள்
புகழோங்கச் செய்திடுவாய்.
விண் பார்த்து விளை பயிர்போல்—உன்
விரிவான வான் கருணைத்
தண் முகத்தைப் பார்த்து நின்றோம்—ஜய
சண்டீ தயாபரியே! (2)

உன்னுருவைப் பார்த்தவுடன்—நெஞ்சில்
ஊறுதடி வீரவெறி
என்னுயிரின் இன்னமுதே—இந்த
ஏழை முறை கேட்டிடுவாய்....
கண்ணம்மா காளியம்மா—உண்மைக்
காதலுடன் கூவுகின்றோம்....
என்னம்மா என்னரசீ—சக்தி
இன்னும் தயவில்லையோ? (3)

41. காலப் புயலிலே

புன்னகவராளி] [ஆதி

காலப் புயலினிலே—தேசக்
கப்பலை நடத்துகிறோம்
ஞாலப் பெருந் தலைவா—அதை
நல்ல துறைசேர்ப்பாய். (கால)

அஞ்சிக் கலங்காமல்—நாங்கள்
ஆண்மையும் கேண்மையுமாய்
துஞ்சாத் துடிப்புறுத்தி—சுத்த
சுதந்தர நிலைபெறவே. (கால)

கடுமனப் பாறைகளால்—வீண்
கட்சிப் பொறாமைகளால்,
இடிவசையம்புகளால்—மன
மிழந்துகை தளராமல் (கால)

மூடக் கொடுமைகளால்—நாங்கள்
மொத்துண் டுலையாமல்
ஆடகப் பெருமானே—நின்
அருள்வலி யளித்திடுவாய். (கால)

---

42. மாறிட வேண்டும்.

உசேனி] [ஆதி

மாறிட வேண்டுமையே—இந்த
மானிடர் இயற்கையெல்லாம்
வீறிடும் சுயநலத்தை—அவர்
விட்டிட வேண்டுமையே (மாறி)

வெடிபுயலிடி வெறிகள்—வெளி
வேடங்கள் வஞ்சனைகள்
தடபுடல் நாடகங்கள்....கடுந்
தந்திரத் தீப்பொறிகள் (மாறி)

உள்ளத்திலே பகையும்—சாய
உதட்டினிலே நகையும்
கள்ளத்துடன் கலந்த—பல
காரியச் சூதுகளும் (மாறி)

முத்தெனப் பேசிடுவார்—பின்னே
முடிச்சவிழ்த் தோடிடுவார்
சொத்து சுகமிருந்தால்—தினம்
சுரண்டிடச் சுற்றிடுவார் (மாறி)

கப்பலைக் கட்டிடுவார்—காந்தக்
கண்ணியும் போட்டிடுவார்
முப்புர ராக்ஷஸர்போல்—அனல்
மூட்டிநல் லூரழிப்பார் (மாறி)

நமனுடன் கைகுலுக்கி—மகா
நாடென விருந்தளிப்பார்
அமைதிகள் பேசிடுவார்—பின்னே
அணுவெடி வீசிடுவார் (மாறி)

யந்திரப் பொருள் குவிப்பார்—மிக
எளியவர் நாடுகளைச்
சந்தையென வளைப்பார்—வம்புச்
சண்டைக் கிழுத் தலைப்பார் (மாறி)

முடியர சாட்சி கண்டோம்—குடி
முறையர சாட்சி கண்டோம்
தடியர சாட்சியெல்லாம்—போர்த்
தம்பட்டம் அரசியலே (மாறி)

தீர்க்க தரிசிகளும்—சன்
மார்க்க தரிசிகளும்
போர்க்கள மின்றிவளர்—புதுப்
புவியினைக் கண்டிலரே. (மாறி)

சமதர்ம யோகத்தினுல்—மனச்
சண்டைகள் ஓய்ந்துலகில்
அமைதியை நாட்டிடவே—பாரத
அன்னை யருளுகவே. (மாறி)

---

43. கவலை தீராய்.

வராளி] [திஸ்ர ஏகம்

மானிடர் படுந்துயரை—இங்கே
மாற்றிட வகையிலையோ?
வானகமே பிரங்காய்—எங்கள்
மனக்கவலை தீராய்.

சந்திர சூரியரே—ஒளிர்
தாரகையின் கணங்காள்,
சுந்தர உலகினிலே—நல்ல
சுதந்தர ஒளி தருவீர்.

வாடி வதங்குகின்றுர்—செக்கு
மாடெனப் பாடுபட்டும்,
ஆடிடும் தென்றலம்மா—எம்மை
அன்புறத் தழுவிடுவாய்.

கொட்டு முழக்குடனே—துள்ளிக்
குதித்திடுந் திரைகடலே—எங்கள்
கட்டுகள் விடுபடவே—வீரக்
கர்ஜனை செய்திடுவாய்.

காட்டுப் பறவைகளா—உங்கள்
கவலையில்லா வாழ்வை
நாட்டுக் குதவிடுவீர்—புது
நாகரிகந் தருவீர்.

44. சுதந்திரம் வேண்டும்.

சாமா] [தேசாதி

சுதந்திரம் சுதந்திரம் சுதந்திரம் வேண்டும்
சூரருக் கருள்செய்யும் பாரதத்தாயே
பதமிழந் தழிந்திடும் பாரத மக்கள்
பண்புடன் வாழ்ந்திடப் பலமருள்வாயே

பால்வளம் தேன்வளம் பாலிக்கும் நாட்டில்
பஞ்சம்வந் தெம்முயிர் பறித்தலுமாமோ?
வேல்வளம் பெருகிய வீரரின் நாட்டில்
வெறுமையும் சிறுமையும் வறுமையு மாமோ?

கண்குளிர் வனப்புள கற்பக நாட்டில்
கண்ணீர்விட் டேழைகள் கதறிடலாமோ?
புண்களைத் துடைத்திடும் புகலெமக்கில்லையோ?
புத்தரின் சந்ததி புழுக்களின் விலையோ?

கார்முக ராமரும் கண்ணனும் விஜயனும்
கந்தனும் அரக்கரைக் கலக்கிய நாட்டில்
சோர்முகச் சொத்தைகள் சத்தமிட் டென்னே?
துணிவுள்ள தீரரின் அணிவகுத் திடுவாய்

தெள்ளறி வாளரின் உள்ளறி யுண்மை
செயல்பெற நயமுறு சுதந்திரம் வேண்டும்
வள்ளல்கள் ஓங்கிட வரிப்புலி மிரட்டா
வண்மை வளர்ந்திடச் சுதந்திரம் வேண்டும்

சங்கநலத்துடனே தனிநபர் உரிமையும்
தாழாத தருமத்தின் சுதந்திரம் வேண்டும்
சிங்கம்போல் எழுந்துநாம் செகப்புகழ் பெறவே
திருக்குறள் வழிவாழும் சுதந்திரம் வேண்டும்.

மனிதரை மனிதர் நன் மனிதராய் மதிக்கும்
மாண்புள்ள மங்கல சுதந்திரம் வேண்டும்
கனிதரும் பொழிலெனக் கலந்தினி வாழும்
கண்ணிய சுதந்திரம் மண்மிசை வேண்டும் (சு)

இதயத் துடிப்புடன் இணைந்திடும் உயிர்போல்
இசையுடன் கருவிகள் இணைவது போலே
உதயக் கதிர்களுடன் ஒளியினைப் போலே
ஒன்றாகும் சுதந்திரம் நன்றாக வேண்டும் (சு)

சுதந்திரம் சுதந்திரம் சுதந்திரம் வேண்டும்
தூயவர்க் கருள்செய்யும் தொல்பெருந்தாயே!

45. சுதந்தரச் சுடரே

ரதிபதிப்ரியா] [ஆதி

சுதந்தரச் சுடரே. சூழ்கநின் கதிரே!
நிரந்தர முலகு நிறைமகிழ் வுறவே;
இந்திய நாட்டை வந்தவ ரெல்லாம்
சொந்தங் கொண்டாடத் தந்திடு வோமோ? (சுதந்)

கொள்ளை யடிப்போர் கொடுமை யிழைப்போர்
எள்ளி யிகழ்வோர் எமையாள் வாரோ!
ஒற்றுமையாக வெற்றிகள் கூறி,
பெற்றிட உரிமை தெற்றென வெழுந்தோம் (சுதந்)

அறத்தினைக் காக்கும் அருட்பெரும் வீரர்
இரத்தமும் ஊற்றி இன்னுயி ரீவோம்
நொந்தது போதும் வெந்தது போதும்;
பந்தனை தீர முந்துவம் வாரீர் (சுதந்)

தூயசமயோக நேசரின் சங்கம்
தாயகத்திற்கு நாயக மாமே.
இது நலமென்றே விதிநியமித்தே
பொதுஜனசக்தி புவியினை யாளுக (சுதந்)

46. சுதந்தர உதயம்

சாவேரி] [ஆதி

பல்லவி

எழுந்தது சுதந்திர பாரத சூரியன்
எல்லாரும் இன்புறவே (எழுந்)

அநுபல்லவி

அழுந்தும் அடிமையிருளச்சம் விலகவே
ஆயிரங் கதிர் வீசித் தாயின்சீர் இலகவே (எழுந்)

சரணம்

பரம ஹம்ஸ வேதம் பரவி யொலித்தது;
பாரெல்லாம் வேதாந்தச் சிங்கம் கர்ஜித்தது
வரம் பெற்ற அருட்சோதி வாசகம் பிறந்தது
வான் மணம் வீசி மலர்ந்த தாவிந்தம் (எழுந்)

வாழி லோகமானியர் வேள்வித்தீ மூட்டினார்
வந்தேமா தரமென்ற மந்திரப் பாட்டினால்;
சூழச் சுதேச வீரர் சொரிந்தனர் ஆகுதி;
துலங்கினான் காந்தியும் இலங்கிடச் சுதந்திரம் (எழுந்)

வேந்தரும் குடிகளும் வேற்றுமை யற்றனர்;
வெவ்வேறு வகுப்பினர் ஒற்றுமை யுற்றனர்;
சாந்த மணம் பரவச் சத்தியம் கனிந்தது;
சகமெல்லாஞ் சமயோக சாதனம் விரிந்தது! (எழுந்)

47. தியாகக் கனல்

தியாகக் கனலெரியும்—நம்
தேசப் பலிபீடம்—அதில்
ஏகத் துணிவுடனே—நாம்
இன்னுயிரைப் பொழிவோம்!
தாயின் மனங்குளிர—சம
தருமம் தலைநிமிர—மனப்
பேயின் பயமொழிய—வாழ்வைப்
பெய்வோம் உய்வோமே! (தி)

மதிமிகு புலவர்களா—மன
வலிமிகு வீரர்களா !
நிதிமிகு செல்வர்களா—கலை
நிறையருட் கவிஞர்களா ! (தி)

எழிலுறு சிற்பிகளா—வாரீர்
எருழு மன்னர்களா.
தொழிலுறு செல்வர்களா—ஆத்ம
சுதந்தரத் தொண்டர்களா. (தி)

வீட்டினைக் காப்பது போல்—இரு
விழியினைக் காப்பதுபோல்—
நாட்டினைக் காத்திடுவோம்—பொது
நலப்பொழில் பூத்திடவே. (தி)

சரிசம யோகத்திலே—தெய்வத்
தணலுறு வேகத்திலே—நல்ல
உரிமைகளைப் பெறவே—இந்த
உலகெல்லா நலமுறவே—நம்
உயிரினை யுதவிடுவோம். (தி)

48. நாட்டுக்கு நல்லது

நாட்டுக்கு நல்லது வீட்டுக்கு நல்லது
நமக்கும் நல்லதடா !
கூட்டுக்கு நல்லது குணத்துக்கு நல்லது
குலத்துக்கு நல்லதடா !

மாட்டுக்கு நல்லது பாலுக்கு நல்லது
மனிதர்க்கு நல்லதடா
பாட்டுக்கு நல்லது பண்ணுக்கு நல்லது
பரவச மாகுமடா !

வேருக்கு நீரினை விட்டு வளர்த்தால்
வீதிக்கு நன்னிழலாம்
ஊருக்குநல்லதுன் பேருக்கு நல்லது
உண்மைக்கு நல்லதடா !

நாருக்கு நல்லது நறுமணம் வீசும்
நாண்மலர் மாலையடா!
யாருக்கும் நல்லது அறிந்தநல் லடக்கம்
அமைதிக்கு நல்லதடா!

மலைவளர் அருவி மழலையைப் போலே
மங்கல யாழிசைபோல்
கலைவளர் புலவன் கனவினி லோங்கும்
கவியழகென வாழ்வோம்.

அலைவளர் கடலின் ஆழத்திலுள்ள
அரிய மணித்திரள் போல்
சிலைவளர் உருவிற் சிற்பியின் மனம்போல்
சிந்தனை வேண்டுமடா!

அரியநல் வாழ்வை அன்பினில் ஊன்றி
அருளினைப் பாய்ச்சிடுவோம்
பெரியநன் நினைவு பிஞ்சுவிட் டோங்கும்
பேரின்பம் பழுக்குமடா—இந்தப்
பாரின்பந் தழைக்குமடா.

49. எந்த வுயிர்க்கும்

எந்த வுயிர்க்கும் உயிராய்—எங்கள்
இதயத்தி லாடிடுந் தெய்வம்
அந்தவுயிரினுக் கன்பு—செய்தால்
ஆண்டவனுக் கினிதாமே.

பூசைச் சடங்குகள் வேண்டாம்—ஐயா
பூசாரி மந்திரம் வேண்டாம்
காசைப் புகைத்திட வேண்டாம்—வேறு
கைக்கூலி தந்திட வேண்டாம்.

உள்ளத்தில் ஊறிடும் ஊற்றை—மலை
உலகினை ஊட்டிட வேண்டி
வெள்ளப் பெருக்கென நல்கும்—அருள்
வேதத்தை ஓதித் தழைப்போம்!

ஊருடன் ஒத்த வுழைப்பு—நம்
ஊருடன் ஒத்த நுகர்வு
ஊருடன் ஒன்றிய வாழ்வே—இந்த
உலகிற் சமயோக வாழ்வாம்.

பன்மனப் பான்மைக ளாலே—யிந்தப்
பாரதப் பேர்பெறு நாடு
பன்மொழி பன்மதஞ் சாதி—வளர்
பன்மரத் தோட்டமதென்போம்.

ஒன்றுபட் டுய்திட வேண்டித்—தூய
உள்ளத்தில் அன்பை வளர்ப்போம்
என்றும் இனியன செய்தே—நாம்
இதயவொருமையில் வாழ்வோம்.

மத்த மதவெறி கொண்டே—இங்கே
மானிடரைக் கொலே செய்யப்
பித்தர் விஞ்ஞான வெடிகள்—போட்டுப்
பேராசைப் போர்களைச் செய்வார்!

குண்டரைக் குண்டு குமைக்கும்—ஈனக்
கொடியரைக் கொடுமை தகர்க்கும்
சண்டையைச் சண்டை யழிக்கும்—உப
சாந்தரைச் சாந்தமே காக்கும்.

50. கண்ணு வாராய்!

கண்ணு கண்ணு வாராய்—எம்மைக்
காக்குங் கீதை தாராய்
அண்ணு அன்பின் உருவே—சுத்
தாத்துமஞான குருவே.

மனங்குளிர வாராய்—எங்கள்
மயக்கம் தீர வாராய்
சினங் கொதிக்கும் அரக்கர்—செய்யும்
தீமை தீர வாராய்.

கஞ்சிக் கலயந் தன்னில்—இரத்தக்
கண்ணீர் கலந்ததையா
வஞ்சமற்ற மக்கள்—படும்
வறுமை தீர வாராய்.

கட்டவேட்டி யின்றி—மானங்
காக்க வகையும் இன்றி
நட்டப் பட்ட மக்கள்—துன்பம்
நலிய வளமீந் தருளாய்.

சத்தச் சந்தையாகி—உலகம்
சண்டைக் காடதாகி
பித்தர் கூட்டமான—மனப்
பேயின் ஆட்டந் தீராய்.

சதிசெய்யும் அரசியலோ—அணு
சக்திகொண்டே விண்ணேறி
மதி மண்டலத்திலிருந்தும்—குண்டு
மாரி பெய்குதையே!

பட்டணங்கள் பொடியாய்—இந்தப்
பாருயிர்கள் மடியும்
ஸ்பட்நிக் வாண வேட்டை—ஓயப்
பரிவு கூர்ந்து வாராய்!

கலகமின்றி மாந்தர்—உளங்
கலந்துவந்து வாழ
உலகிலின்பமான—சம
யோக மோங்க வாராய்!

51. ஒற்றுமையாய்

ஒற்றுமையாய் ஒருகுலமாய்
உலகில் வாழ்வோமே
கற்றுழைத்து வளம்பெருகிக்
கலந்து துய்ப்போமே.

ஆண்டவனே அம்மையப்பன்
அன்புசெய்வோமே
வேண்டாத வேற்றுமையை
விட்டொழிப்போமே.

அன்புண்மை இன்சொல்லறம்
அகிலவேதமாம்
தம்போலே பிறரென்பது
சமய போதமாம்.

அருணனிலே கிரணமென
அழகி லொன்றுவோம்
கருணையான கடவுளன்பு
காக்கு மென்னுவோம்.

52. எழுந்தருள்

எழுந்தருள் ஜயசக்தி--எங்கள்
இதயக் குகையினிலே
பொழிந்தருள் புன்னகையை—இங்கே
புதுயுகம் புலர்ந்திடவே.

கலைமகளே சரணம்—கல்விக்
கதிர்களை வீசிடுவாய்.
மலைமகளே சரணம்—சுப
மங்கல வாழ்வருளாய்.

திருமகளே சரணம்—செல்வத்
திருக்களை மிகத் தருவாய்.
குருசிவ காளியம்மே—வெற்றி
குலவிடப் பலந்தருவாய்!

சுயநலக் குண்டர்களின்—வெய்ய
சூழ்ச்சியைத் தகர்த்தெறிவாய்
பயமொழித் தபயமருள்—ஓம்
பாரதசக்தி யன்னை.

53. வழிகாட்டிடுவாய்

நாங்களுன்மைந்தர் ஞாலத்தில் வாழ
நல்வழி காட்டிடுவாய்!
ஏங்குதலின்றித் தூங்குதலின்றி
இனிது முன்னேறிடவே.

அறிவினைத்தூண்டி அன்பினைத்தூண்டி
ஆத்ம பலம் பெறவே
பிரிவினையின்றிப் பிரியமாய் வாழும்
பெருமை யளித்திடுவாய்.

வானத்திலேறும் விமானத்திலேறி
மரணக் கதிர் வீசும்
ஈனத்திமிர்கொள் அரக்கருளத்தில்
இரக்கத்தைத் தூண்டிடுவாய்.

போர்வெறி குமுறும் காரிருட் காட்டிற்
புகலுனை யன்றியிலோம்
தேர்பரியுடனே வார்முரசடித்துத்
தீர்சமரில்லையிதே!

கோடிகோடியாய் மக்களைக் கொல்லும்
குண்டர் மனந்திருந்த
நீடிய ஆன்ம ஞான—விஞ்ஞான
நேயத்தை வளர்த்திடுவாய்.

54. பொலிக!

ஆண்மை கொண்ட வீரமும்
அச்சமற்ற நெஞ்சமும்
கேண்மை கொண்ட நேர்மையும்
கேடில்லாத வுறுதியும்
பொலிக பொலிக பொலிகவே!

திருகிவிட்ட மீசையும்
திண்மலைப் புயங்களும்
பரிதிபோன்ற விழிகளும்
பரமஞான மொழிகளும்

உறுதியான உடலமும்
ஊக்கமான கைகளும்
பொறுமையான சிந்தையும்
போரை வெல்லுந் தீரமும்

சீர் சிறந்த செல்வமும்
தியாக யோக போகமும்
பார் புகழும் பண்புடன்
பணிநலப் பரிசுடன்

மதிமிகுந்த மாண்மையும்
மறுவிலாத வாய்மையும்
துதிமிகுந்த புதுயுகத்
தொண்டர் தொண்டு மீகுவாய்.

விதியை வெல்லும் ஆற்றலும்
விஞ்ஞான ஞான ஜோதியும்
பொதுநலப் புலமையும்
பொலிக பொலிக பொலிகவே!

55. ஓம் பராசக்தி

ஓம்பராசக்தி சண்டிபவானி
உலகநாயகியே உயிர்த்தாயே!
பூம்பொலிவுறு புண்ணிய விண்ணே!
போற்றி போற்றி புலவரின் கண்ணே!

சோகமோகச் சுழலினிற் சிக்கிச்
சுருதிகெட்ட துயர்மிகு வாழ்வில்
வேகமாகநின் வீணையை மீட்டி
வேதநாதம் விளைந்திடச் செய்வாய்.

தொல்லை மிக்க சுயநலக் கும்பல்
சூதுவாதுடன் சூழ்ச்சிகள் செய்தே
அல்லல் செய்வதை நீயறியாயோ?
அன்பருக் கபயம் அருளாயோ?

எல்லையற்ற நின் சிற்சக்தி வெள்ளம்
என்றுமுன்னை நினைப்பவர்க்கின்றோ?
மல்லரக்கர் வளம்பெறச் சாது
மக்களிங்கு மடிவது மாண்போ?

துட்டராக்ஷஸ ரத்தப் பிசாசு
தூருடன் ஒழியத் துணைசெய்வாய்
அட்டமங்கலச் செல்வமளிப்பாய்
அழகிளந் திருவே ஜயலக்ஷ்மீ!

56. தேசந் தவிக்குதையா

தேசந் தவிக்குதையா!
தெய்வமே எங்கள்மனப்
பாசங் குமுறுதையா
பார்த்திரங்க மாட்டாயோ?

மானம் பறக்குதையா?
மதிமோசம் போனதையா!
சேனை பலமருளாய்
செருபகையை வீழ்த்திடவே!

பஞ்சமா பாதகரிப்
பாரை வருத்துகிறார்
நுஞ்சுவதோ நீயும்
துரியக் கடலினிலே!

வாதுசெய் வம்பர்
வலுத்தார் உலகினிலே
சாது சகோதரரைத்
தஞ்சமளித் தாளாயோ?

இருள் வறுமைக் காடாக்கி
    இன்னல்செயும் வன்மனத்தார்
அருள்வலிமை கண்டொழியும்
    அந்நாளும் எந்நாளோ?

எத்துக் கடையாக
    ஏமாற்று மாமாயர்
பித்தொழிந்து நல்லோர்
    பிழைக்குநா ளெந்நாளோ?

பொய்யிலே வாழுகின்ற
    புல்லர் மதமொடுங்க
மெய்யொளியை வீசாது
    வீண்காலம் போக்குவதோ?

பாபமறியோம்
    பழியறியோம் பாரதர்கள்
ஆபத்திற் சிக்கி
    அலறுவதைக் கேட்டிலையோ?

பஞ்சமோ பஞ்சமிந்த
    பஞ்சைகளா னோமே
தஞ்ச மருளாது
    தாய்மனதுங் கல்லாமோ!

அஞ்ஞானப் போர்வெறியர்
    ஆட்சியிலே ஐயாவே
விஞ்ஞானத் தைவைத்து
    வேடிக்கை பார்ப்பாயோ?

ஆகாய மேறி
    அணுகுண்டு போட்டுலகைச்
சாக மடிப்பவரைத்
    தடுத்தல் உனக்கரிதோ?

உன்னருளை நாடி
　　உலவாத் தவம் புரிந்தோர்
இன்னல்களைத் தீர்க்கும்
　　இரக்கம் உனக்கிலையோ?

நல்லறமே தாரகமாய்
　　நாளும் உனை நினைந்தோர்
அல்லற் படுவதுவும்
　　ஐயாவே சம்மதமோ?

எல்லாம் வல்லா யுனக்கும்
　　ஏழை யெளியவர்கள்
அல்லலற வாழச்செய்
　　அன்பும் அரிதாமோ?

57. தேசம் ஒன்று

தேசம் ஒன்று பாசமொன்று
　　தெய்வ பக்தி ஒன்றே!
நேசமாக வாழ்ந்திடலாம்
　　நீயும் நானும் ஒன்றே.

ஓம் என்றாலும் ராமென்றாலும்
　　உள்ள பொருள் ஒன்றே
ஆம் என்றாலும் ஆமனென்றாலும்
　　அமீன் என்றாலும் ஒன்றே

உலகமுய்ய வந்த பெரியார்
　　உள்ள மெல்லாம் ஒன்றே
கலகச் சாதி மதமல்லாத
　　கருணை கொண்டு வாழ்வோம்!

மதக் கண்ணாலே பார்த்திடாது
மனக் கண்ணாலே பார்ப்போம்
இதயக் குகையில் இருந்தருளும்
உதய ஜோதி ஒன்றே.

58. பாரத தருமம்

பாரத தருமம் இதுவே—அது
பாரினுக் கெல்லாம் பொதுவே
ஓர்பரமாத்மா ஒருலகான்மா
ஓர் ஜீவான்ம வுணர்வே.

பாலுந்தயிரும் வெண்ணெயும் போலே
பாகும் பருப்பும் போலே
தோலும் சதையும் துடிப்பும் போலே
துள்ளும் உயிருடலுலகே—அதன்
உள்ளும் புறமும் ஒன்றே.

முன்னே கடவுளை யெண்ணிப் பணிவோம்
முன்னுலகப் பணி புரிவோம்
பின்னே தன்னுயிர் பேணுத லறிவோம்
பிறர்க்கென வாழ வுரியோம்

துயருக்கு மருந்தாம் வாழ்வுக் தவிரும்
சோர்வுக்கு நல்லிள நீராம்
உயிருக்குள் ளுயிராம் ஒன்றினைக் கூடின்
ஒற்றுமையாகும் உலகே.

59. கலி நீங்குமே

உலகமெல்லாம்—சமயோக பேரிகை
ஓங்குமே—கலி—நீங்குமே
கலக மின்றிக் கலந்துண்ணுங் காலமுங்
காணுமே—வெற்றி—பூணுமே.

சாதி பேதச்சமய வெறித் திமிர்
தாழுமே—அன்பு—சூழுமே
நீதியற்ற கொடியரின் வஞ்சனை
நீறுமே—மனம்—மாறுமே.

அடிமையச்ச மடமை யிருட்பகை
அண்டுமோ—துயர்—மண்டுமோ
வெடியணுக்கனல் வீறிடினும் சக்தி
வீழுமோ—அச்சம்—சூழுமோ ?

விலைப்படுத்திடும் வஞ்ச வலைகளை
வீட்டுவோம்—கனல்—காட்டுவோம்.
தலைநிமிர்ந்து சுதந்தரப் பொன்முடி
தாங்குவோம்—வாழ்வில்—ஓங்குவோம்.

வீரம்வீர மென்றே புவிப்போரினை
வெல்லுவோம்—முன்னே—செல்லுவோம்
கோரராட்சசக் கூற்றைக் குமைக்கத்தோள்
கொட்டுவோம்—கச்சை—கட்டுவோம்.

மாந்த ரெல்லாம் ஒருகுலத் தோழராய்
வாழுவோம்—நன்மை—சூழுவோம்
சாந்தமாகிய சத்திய வாழ்வினைச்
சாதிப்போம்—எங்கும்—போதிப்போம்.

60. வீர கர்ஜனை

வீரகர்ஜனை செய்—மனிதா
வேத கான முடனே
போரதிர் முனையில்—சக்தி
பொங்கச் சிங்கம் போல (வீர)

காரளாவும் இடிபோல்—மதி
கண்டுவிம்மும் கடல்போல்
வாரளாவு முரசம்—ஒலிக்க
வரமளாவும் வாக்கால் (வீர)

உதய வானம் போலே—உன்
உள்ளமைதிசேர
புதிய யோக வாழ்வில்—இந்தப்
பூமியொன்று சேர (வீர)

மதிமயக்கந் தீர—சாதி
மதமயக்கந் தீர
சுதியிற் கூடும் இசைபோல்—ஆன்ம
சுதந்தரத்திற் கூடி. (வீர)

காற்றைப்போல வுலவிப்—பூங்
காவைப் போல வுதவி
ஆற்றைப் போலப் பாடி—இயற்கை
யழகைப்போல நிலவி (வீர)

கூற்று மஞ்சி நடுங்கத்—தோள்
கொட்டிப் போர்புரிந்தே
எற்றி வெற்றிக் கொடியை—நின்புகழ்
எண்டிசையும் பரவ
வீர கர்ஜனை செய்.

61. கண்கள் விழித்தெழுந்தோம்

கண்கள் விழித்தெழுந்தோம்—மூடக்
கட்டுகளைப் பிளந்தோம்
பண்கள் முழங்கிடவே—புதுப்
பண்புடன் வாழுகின்றோம்.

கோழைத் தனம் விடுத்தோம்—மலைக்
கோபுரம் போலுயர்ந்தோம்
ஏழைத் தனம் விடுத்தோம்—தே
வேந்திரன் போலெழுந்தோம்..

வஞ்சப் பழங் கொடுமை—எம்மை
வாழ வொட்டா மடமை
அஞ்சப் பழிசெய்துயர்—எம்மை
அண்ட விதியு முண்டோ ?

ஏனினிப் புன்கவலை—இங்கே
ஏதினி மாயவலை
மானிட வாழ்வினிலே—தெய்வ
வானரசைக் கொணர்வோம்.

62. சங்கு முழங்கிடுவோம்

சங்கு முழங்கிடுவோம்—வெற்றித்
தாரைக ளூதிடுவோம்
மங்கள பாரதத்தின்—தெய்வ
மாண்பினைக் காத்திடுவோம்

கிழக்கு வெளுத்ததுபார்—காலைக்
கிளிகளின் பேச்சினைக்கேள்
சழக்கினி யில்லை யிங்கே—சம
யோகந் தழைத்ததுபார்.

சண்டைப் பிசாசுகளின்—குண்டுச்
சத்தம் அடங்கிடவே
பண்டை முனிவர் கண்ட—ஆன்மப்
பண்பு கிளர்ந்திடுமே.

நள்ளிரவிற் புகுந்தே—புலி
நரிகளிடும்பை செய்யும்—அன்பு
வெள்ளமின் சாரத்தினல்—அருள்
வேலி யமைத்திடுவோம்.

பொன்னிளங் காலையிலே--மணப்
புன்னகைப் பூக்களுடன்--ஆடும்
இன்னிளங் காற்றினைப்போல்--நாம்
இதயங் கலந்திடுவோம்--ஆங்கே
இகலு மிடம் பெறுமோ?

நெஞ்சினில் வஞ்சமின்றி—நல்ல
நேர்மை கடைப்பிடிப்போம்
அஞ்சாத ஒற்றுமையால்—உலகில்
அமைதியை நாட்டிடுவோம்.

மானிடச் சாதியின்றி—இங்கே
மற்ருெரு சாதியில்லை
நானெதுவோ அதுநீ—என்ற
ஞான முதித்ததுவே.

63. நாங்கள் இந்தியர்

நாங்கள் இந்தியர்! நாங்கள் இந்தியர்
ஞாலத்திற்கு நன்மை செய்ய
நாடும் இந்தியர்!

கோழையச்சம் வறுமை மடமைக்
கொடுமை யின்றியே
குடியரசுக் கொடி யுயர்த்தி
முரசு கொட்டியே
ஏழை யடிமை யென்பதின்றி
எவரும் இன்புற
இன்னலற்ற நன்மை செய்யும்
இயல்பு கொண்டவர் (நா)

சூதுவாது தீதிலாத
சொக்கத் தங்கமே-தீயர்
சூழ்ச்சி வீழ்ச்சி காணச் செய்யும்
தூய வீரர் யாம்
சாது வாகச் சமயோகத்தின்
சக்தியா லுயர்
சாந்தமான சத்தியச்
சன்மார்க்க இந்தியர் (நா)

ஊழிமழையும் இடியும் புயலும்
உறமுங் காலத்தில்
உணவிலாமல் உடையில்லாமல்
உலரும் ஏழையின்
பாழிரத்தக் கண்ணீர் துடைக்கப்
பதறி முன்சென்றே
பணி புரியும் அன்பு கொண்ட
பண்பர் இந்தியர்-உலகின்
அன்பர் இந்தியர் (நா)

கடமையான பொது நலத்தைக்
காக்கும் இந்தியர்
கடுமையான கொடுமைப் போரைத்
தாக்கும் இந்தியர்
உடலுயிர் பொருளனைத்தும்
உண்மை வாழவே
உதவிடும் இதமுடைய
உண்மை இந்தியர்-நாங்கள்
உலக இந்தியர் (நா)

64. பாட்டாளி

பாட்டாளி வா கூட்டாளி
பாருலகத்தை ஆட்டாளி
காட்டைத் திருத்தி நாட்டைச்செய்
கையை முத்தம் கொஞ்சுகிறேன்.

வானம் பொழிய மண்விளைய
வணங்கி நீயும் பாடுபட
ஊனும் உயிரும் ஓங்குமடா-
உலகத்துயரும் நீங்குமடா.

ஓட்டைக் குடிலும் கந்தலுமாய்
ஒட்டிய வயிறும் பிச்சையுமாய்
ஆட்டுங்குளிரில் வாழுவதேன்
அழுகைக் கண்ணீர் ஓடுவதேன் ?

பலரைப் பட்டினி போட்டினிமேல்
பணத்தைப் பூட்டும் பாவியில்லை
உலகம் உலகோர் உரிமையடா
உழைப்பும் பயனும் பொதுமையடா.

முதிய மூடப் புல்லுருவி
முளையில்லாது செத்ததடா
புதிய காலம் பூத்ததடா
பொதுமை முரசம் ஆர்த்ததடா!
வீடு வீடாய் விடுதலையின்
வெற்றிச் சங்கம் முழங்குதடா
நாடு பச்சை குலுங்குதடா
நல்லதெய்வம் வழங்குதடா!

65. செல்வ மழை

செல்வ மழை பொழிய வேண்டும்—நம்
தேச வளம் பெருக வேண்டும்
நல்ல தொழில் வளர வேண்டும்
நாத முரசொலிக்க வேண்டும்.

இந்திய நாடு நம் உயிரே—அதன்
இன்னுயிர் ஆவது பயிரே
முந்ததை விளைத்திடுவோமே—நல்ல
முயற்சியால் முன்னேறுவோமே.

வேகநல் லருவிக ளாலே—பல
மின்சாரப் பொறிகளைச் சுழற்றி
போகபோக்கியங்கள் அமைப்போம்—பஞ்ச
பூதங்கள் சக்தியைச் சுரக்கும்.

ஏழையும் கோழையும் இல்லை—இனி
ஏக்கமும் தூக்கமும் இல்லை
ஆழியும் இரவியும் போலே—நாம்
ஆருல கின்புற உழைப்போம். (செல்வ)

66. நெஞ்சுரங் கொண்டோம்

நெஞ்சுரங் கொண்டோம் அஞ்சுத லில்லோம்
நீண்ட சுடர் மணிகாள்
நஞ்சுறு பகையும் சிறையும் இடரும்
நமனும் என் செய்யும்?

“ நாமார்க்கும் குடியல்லோம் ” என்ற
நாவரசர் மரபார்,
தாமார்க்குங் குடியல்லாப் பரமன்
சக்திவளர் மைந்தர்.

பாரத வீரர் பேரிகை கொட்டிப்
பாய்ந்து நடந்திடுவோம்!
ஆரினி நம்மைப் போரினில் வெல்வார்
ஆளப்பிறந்தவர் நாம்—உலகை
ஆளப்பிறந்தவர் நாம்.

சொல்லும் செயலும் ஒன்றிய நல்லார்
துணிந்து முன்செல்வோம்
அல்லலை யெல்லாம் கெல்லியெறிவோம்
ஆத்ம பலத்தாலே—நம்
அன்பு நலத்தாலே.

67. சேர்ந்து வாழும்

சேர்ந்துவாழுந் திறம் அறிவோமே
தீரராகத் தலை நிமிர்வோமே
சோர்ந்திடாது துணிந்து நிற்போமே
சொல்லும் செய்கையும் ஒன்றுசெய்வோமே

கூர்ந்த நன்மதி கொண்டுழைப்போமே
 கொண்ட கொள்கைக் குயிர்கொடுப்போமே
நேர்ந்த போதறத் தொண்டுசெய்வோமே
 நேரத்தைப் பொன்னென்றே நினைப்போமே.

ஆற்றலும் அறிவும் வளர்ப்போமே
 ஆண்மை யாண்மை யென்றே வுயிர்ப்போமே
சீற்றமுற்றெதிர் தீய பகையும்
 திருந்தச் செவ்விய வீறு கொண்டோமே

ஏற்றமான சுயேச்சை பெற்றோமே
 இன்னுயிரையும் ஈந்துழைப்போமே
போற்றி சக்தி புதுயுகத் தேவி
 பொங்கு மங்களந் தந்தருள்வாளே.

தன்னலத்தைத் தவிர்த்திடுவோமே
 தாய்நலஞ்செய் தவம்புரிவோமே
அன்னியர் வலையை அறுப்போமே
 ஆண்மை தன்னை மிகவளர்ப் போமே
மன்னன் என் மனச்சாட்சி யென்போமே
 மாநிலம் பொதுவாய் மதிப்போமே
இன்னமும் இருளில் மடியாமல்
 இரவி போன்று விழித்தெழுவோமே.

68. எழுந்து வாருங்கள்!

எழுந்து வாருங்கள்—வீரர்
 எழுந்து வாருங்கள்
இந்தியாவின் இதயத்துடிப்பில்
 இணைந்து சேருங்கள்

அந்தச்சாதி இந்தச்சாதி
அவரிவர் என்றே
விந்தை விந்தை சந்தைப் பேச்சை
வெறுத்துத் தள்ளுங்கள் (எழு)

வானஞ் சூழ்ந்த உலகில் வாழும்
மக்கள் ஓர் குலம்
ஈனச்சாதி சமயபேதம்
இல்லையே யினி (எழு)

எத்தனைக் கவியரசர்
இதயக் கனவிலே
சித்திரங்கள் எழுதி எழுதிச்
செயலை ஊக்கினர். (எழு)

அத்தனைபேர் தியாகத்தீயும்
அணைந்து போவதா?
சொத்தையாகி நமதுநாடு
சோர்ந்து சாவதா? (எழு)

மடமையின்றி அடிமையின்றி
வறுமை யின்றியே
கடமைகாத்து நாடுவாழக்
கருதிடுவோமே (எழு)

மண்வெறிக் கொடியரிங்கு
மண்டிடாமலே
கண்விழித் திருந்துநாட்டைக்
காவல் செய்வோமே. (எழு)

69. ஜய பாரதம்

ஜய பாரதம், ஜய பாரதம், ஜய பாரதம்
ஜய ஜய ஜய ஜய—பாரதம்

பாருக்கு ஞானப் பரிதி-எங்கள்
பாவன பூமி பாரதம்
வேருக்கு நீரென வேதம்-அதில்
விளைந்த விண்சுவை பாரதம் (ஜய)

ஆருக்கும் தீமையில்லாமல்-நல்
அன்பே செய்யும் பாரதம்
நேருக்கு நேராய் நீதி-தரும்
நேர்மையான பாரதம் (ஜய)

கலகமில்லாமல் மாந்தர்-மனங்
கலந்து வாழும் பாரதம்
உலக வாழ்வில் ஒருமை கண்ட
யோகவிதானம் பாரதம் (ஜய)

சடவுடலுக்குள் சித்தைக்-கண்ட
சாதன சாலை பாரதம்
கடவுளறிவிற் கனிந்த-நல்ல
கற்பகச் சோலை பாரதம் (ஜய)

தன்னிகரில்லாக் கருணை-காட்டும்
சாந்த பூமி பாரதம்
அன்னியர் வந்தே வணங்கும்-எங்கள்
அமர பூமி பாரதம் (ஜய)

காடும் மலையும் தவயோகக்
கனலொளி வீசும் பாரதம்
வீடும் நாடும் உலகும்-சுகமாய்
விளங்க நலஞ்செய் பாரதம் (ஜய)

கார்முகராமன் கண்ணன் காத்த
கனிமுகத் திருவாம் பாரதம்
போர்முக அரக்கர் பொடிபட நூறும்
பூரண சக்தி பாரதம் (ஜய)

பார்புகழ் புத்தர் சங்கரர் வந்த
பரமானந்தப் பாரதம்
பேர்புகழ் பெற்ற வீரர்கள் வாழும்
பெருமை கொண்டது பாரதம் (ஜய)

வேதவியாசர் சுகர் வான்மீகி
வித்தக வள்ளுவர் கம்பன்
ஓதியதெய்வத் தீஞ்சுவை நாடே
யோகமும் போகமும் ஒன்றும் (ஜய)

சேரன் செழியன் வளவன் விஜயன்
சிங்கன் வீரசிவாஜி
சூரன் ஆண்ட பாரதநாட்டைத்
தொழுவோம் அதன்பணிக் கெழுவோமே!

70. இமாலயம்! இமாலயம்!

இமாலயம்! இமாலயம்! இமாலயம்!
எங்கள் சுத்த சக்தி வாழும் ஆலயம்
சமானமேதிதன் பனிமுடியிலே—எங்கள்
தாயின் ஜோதி தாண்டவம் புரியுமே (இமா)

சுற்றிலும் உலகமாமதங்களும்
சூழ்ந்திதனை ஆசிகூறித் துதிக்குமே
பெற்றதாயின் பாலைப் போல ஆறுகள்
பிரியமாய்ப் பயிர்களை வளர்க்குமே.... (இமா)

வேதவ்யாசர் வாழ்ந்தநம் இமாலயம்
வித்தகத் தமிழ்முனி வசித்ததே
மேதை சங்கரர் தவஞ்செய் மாமலை
வீரபாரதாத்ம சக்தி பீடமே (இமா)

சேரசோழ பாண்டியர்தம் கொடியினைத்
தீட்டி வீறு பெற்றநம் இமாலயம்
சோரர் வந்ததைப்படை யெடுக்கவோ?
துணிந்தபோர் தொடுத்துவெல்லச் செல்வமே (இ)

இந்தியாவின் சிகரமாம் இமாலயம்
இவ்வுலக ஞான சக்திக் கோட்டமே
தந்தை தந்தை தந்தையர் உரிமையே-ஓம்
சக்தி தேவி உலகையாளும் அரியணை

இமாலய மெனில் இதயம் பொங்குமே
ஏறும் வீர சக்திபெற் றிலங்குமே
உமாபதித் தவக்கனலைத் தூண்டுவோம்-இந்த
உலகமெல்லாம் அமைதியாக வேண்டுவோம்.

71. சிங்க நாதம்

(மாண்டு—ஜம்பை தாளம்)

ஜேஹிந்த்! ஜேஹிந்த்! ஜேஹிந்த்!
சிங்கநாத கர்ஜனை செய்தே—ஜே ஜே
ஜேஹிந்தென்ன வீரர் முன்செல்வோம்

சங்கநாத பேரி கொட்டியே—ஹே ஹே
சத்தியச் சமரை வெல்லுவோம்!

கோடி கோடி வீரர் நாடிதே—வெற்றிக்
கொடிபறக்கும் கொற்ற நாடிதே—அன்பர்
கூடிவாழி பாடு நாடிதே—தெய்வக்
கோயிலான தூய நாடிதே. (ஜே)

தேனும் பாலுந் தீங்கனிகளும்—எங்கும்
செழித்துக் கொட்டும் செல்வ நாடிதே
மானு மயிலுங் குயிலுங் கிள்ளையும்—சோலை
வனப்பிலே யுலாவு நாடிதே. (ஜே)

அன்னியர் நம் அன்னை நாட்டினை—ஹே ஹே
அடிமையாக்க முடியுமோ இனி
தன்னுறுதி கொண்ட சூரர் நாம்—சக்தி
தணலுகின்ற தரும வீரர் நாம். (ஜே)

பாரதக் குடி யரசிலே—இனிப்
பஞ்சமில்லை பயமு மில்லையே
சூரியனைப் புய லணைக்குமோ—எங்கள்
சுதந்தரத்தைப் பகை கெடுக்குமோ? (ஜே)

பார்க்கும் சிங்கப் பார்வை போதுமே—ஹே ஹே
பதைபதைக்கப் பகையை மோதுவோம்
ஆர்க்கும் வெற்றி முரசொலியுடன்—நாம்
அணிவகுத்துப் படை நடத்துவோம். (ஜே)

புத்தியாலும் புகழை நாட்டுவோம்—அருட்
புலமையால் நலம் புரிகுவோம்—ஆத்ம
சத்தியால் உலகையாளுவோம்—யோக
சாதனத்தால் சாவை வெல்லுவோம். (ஜே)

படபடக்கும் அணு வெடிக்கினும்—எங்கள்
பாரதாத்ம சக்தி யஞ்சுமோ
நடுநடுங்கிப் பதகர் வீழவே—ஒரு
நல்லதெய்வ ஜோதி சூழுமே. (ஜே)

வெற்றிவேல் முருகன் வீடிதே—ஜய
வீரராமன் ஆண்ட நாடிதே
நெற்றிக்கண்ணன் அரியணை யிதே—கௌரி
நெடுந்தவம் புரிந்த நாடிதே. (ஜே)

நெருப்புக்கக்கும் நிருதர் தேக்கினும்—நாம்
நீரின் வெள்ளம் போல முன்செல்வோம்
விருப்பு மிக்க வெற்றி காட்டுவோம்—ஆம் ஆம்
விண்ணையெட்ட விருதை நாட்டுவோம்.

ஜேஹிந்த்! ஜேஹிந்த்! ஜேஹிந்த்!

72. நமது நாடு

நமதுநாடு நமதுவீடு நமதுசக்தி பாரதம்
குமுதமிட்டு முத்தலைகள் கொஞ்சுகின்ற பாரதம்
இமயந்தொட்டு குமரிமட்டும் எழில்குலுங்கும் பாரதம்
அமுதஞான அமைதிகண்ட அமரநாடு நம்மதே!
ஜேஹிந்த் ஜேஹிந்த் ஜேஹிந்த்.

உலகுபோற்றும் உத்தமர்கள் உதித்தநாடு நம்மதே
பலமிகுந்த ஆத்மசக்தி பழுத்தநாடு நம்மதே
நலமிகுந்த வேதவாழ்வை நாட்டுநாடு நம்மதே
இலகுபுண்ய பூமியில் இராக்ஷஸர் புகுவதோ? (ஜே)

வெறிபிடித் திரத்தஞ் சிந்தும்
வீணர் மண்ணைக் கௌவினர்
கறிபிடித்த ஊணர்கள்
கலங்கி வீழ்ச்சி கண்டனர்

அறிவிலி யரக்கர் கோடி
அற்றழிந்து போயினர்
நெறி யறிந்த நேர்மையாளர்
நின்று வெற்றி யாண்டனர். (ஜே)

அஞ்சுகின்ற பேடி யார்?
அதர்மத்தைச் சகிப்ப தார்?
வஞ்ச நஞ் சரக்கரின்
வலையில்வீழும் வம்பர் யார்? (ஜே)

நெஞ்சமுண்டு நீதி யுண்டு
நிகரிலாதவீறு முண்டு
அஞ்சிடோம் அயர்ந்திடோம்
அமர் முறுக்கி வெல்லுவோம். (ஜே)

துஞ்சிலோம் அஞ்சிலோம்
சுதந்தரத்தைப் போற்றுவோம்
சுதந்தரம் நமதுயிர் சுதந்தரம் நமதுடல்
சுதந்தரம் நமதிசை சுதந்தரம் இதந்தரும்.

ஜெஹிந்த் ஜெஹிந்த் ஜெஹிந்த்!

73. இவரும் அவரும்

(நேசபக்தர்—நேசவிரோதிகள்)

இவர்—தன்னல மற்ற பெரியவர்
அவர்—அன்னியர் சூட்சிக் குரியவர்
இவர்—சுத்த சுதந்தரம் நாடினர்
அவர்—உத்யோக வேட்டைகள் ஆடினர்
இவர்—நாட்டு முன்னேற்றத்தை வேண்டினர்
அவர்—நாட்டினுக்கே குழி தோண்டினர்
இவர்—சிங்கம்போல் ஆண்மையைக் காட்டினர்
அவர்—சிங்காரமாய்க் கொலு நீட்டினர்

இவர்—சிறைகளில் வாடி வருந்தினர்
அவர்—நிறைய விருந்தை யருந்தினர்
இவர்—அடக்கு முறைகளை மீறினர்
அவர்—அடக்குங்கள் என்றின்னுங் கூறினர்
இவர்—படுதுயர் தாங்கி யுழைத்தனர்
அவர்—தடிக்கொண்டு மீதும் அடித்தனர்
இவர்—வந்தேமா தரமென்று கோஷித்தார்
அவர்—சந்தடிச் சாக்கினில் தூஷித்தார்
இவர்—பணத்தைத் துரும்பெனும் த்யாகியாம்
அவர்—பணமே பெரிதெனும் மோகியாம்
இவர்—வரிச்சுமை நீக்க முயலுவார்
அவர்—வரிச்சுமை ஏற்றத் தயங்கிடார்
இவர்—கள்ளென்னும் பேயினைக் கொல்லுவார்
அவர்—கள்ளில் வருமபடி மொள்ளுவார்
இவர்—சுதேசத் தொழில்களைப் பேணுவார்
அவர்—விதேச வுடைகளைப் பூணுவார்
இவர்—ஏழைகள் பட்டினி தீர்ப்பவர்
அவர்—ஏழையைப் பார்க்கத் தவிர்ப்பவர்
இவர்—தேசக் கொடியை வணங்குவார்
அவர்—தேசக் கொடியைப் பிடுங்குவார்
இவர்—உரிமையைக் காக்கப் போராடினர்
அவர்—துரைகள் சலுகையைத் தேடினர்
இவர்—அடிமை விலங்கை யறுப்பவர்
அவர்—குடிகள் சுயேச்சை வெறுப்பவர்
இவர்—கல்வி தொழில்கள் வளர்ப்பவர்
அவர்—பல்விதமாய் சொத்துச் சேர்ப்பவர்
இவர்—எல்லா நலங்களும் ஆற்றுவார்
அவர்—செல்வச் செருக்குகள் காட்டுவார்
இவர்—வோட்டுகள் கேட்பது நாட்டிற்கே

அவர்—போட்டி சுயநல வேட்டைக்கே
இந்த—தேசபக்தர் குலம் வாழ்கவே
அந்த—தேசத் துரோகிகள் வீழ்கவே!

74. வீராவேசம்

வீரர் ஆவேசத்தோ டெழுவோம்
வெற்றியிங்கே பெறுவோம்–பகை
வீழச்சமர் புரிவோம்.

அன்னை உயிரினுக்கே–இன்று
ஆபத்து வந்ததடா
பின்னை நமக்குயிரேன்-ரண
பேரிகை கொட்டிடுவோம்

நாட்டினைக் காத்திடுவோம்-வாரீர்
நல்லறங் காத்திடுவோம்
வீட்டில்வந் தின்னல்செய்யும்–பகையை
வேருடன் மாய்த்திடுவோம்

மெய்யினுக் கச்சமுண்டோ-அற
வேள்விக்குத் தோல்வியுண்டோ
பொய்யரக்கப் பதர்கள்–என்றும்
போரினில் வென்றதுண்டோ?

பாரதப் பண்பாடே–நமக்குப்
பாதி பலந்தருமே
மாரத மாமணியாய்–சிவாஜியின்
மரபில் வந்தவர் நாம்

உன்னதக் கைலையிலே-நம்
உண்மைக் கொடியேற்ற
முன்னடி வைத்துவிட்டோம்-வெற்றி
முரசு கொட்டிடுவோம்

கூற்றெதிர் வந்திடினும்—நாம்
கூடி எதிர்த்திடுவோம்
சாற்றுங்கள் அச்சமின்றி—வீர
சக்தி ஜயம் எனவே.

கட்டிமுத்தம் கொடுக்கும்—இளங்
காதல் மனைவியர்காள்
பெற்றுவளர்த்தவர்காள்—எம்மைப்
பேணும் உறவினர்காள்

ஆசியளித்திடுவீர்—எங்கள்
அன்பிற் குரியவர்காள்
பாசத்தைத் தேசத்தின்மேல்—வைத்துப்
பாரதப்போர் புரிவோம்.

இந்திய ஜீவசக்தி—ஒருங்கே
எழுந்துமோதையிலே
பந்தப் பகைக்குலமும்—இங்கே
படை நடத்துவதோ?

பேடிகளென்பாரோ—அகிம்சைப்
பேதைகளென்பாரோ?—எங்கள்
நாடியிலே வீரத்-துடிப்பின்
நடனத்தைக் காண்பாரோ?

நாட்டிலுயிர்வைத்தே—எழுந்தோம்
நாற்பது கோடி மக்கள்
வாட்டிப்பகைப் படையை—வெற்றி
வாகைபுனைந் திடுவோம்.

உலக வரலாற்றில்—எங்கள்
உத்தம பாரதப்பேர்
இலகச் சமர் புரிவோம்—அறம்
என்றும்வென் றோங்கிடுமே.

75. பலிதானம்

பலிதானம் பலிதானம்
பாரதத் தாயே—நின்
சீரிய பணிக்கே—நாங்கள்
பலிதானம் பலிதானம்

உடல்பொருள் ஆவியெல்லாம்
உனக்கே யடைக்கலமாம்
கடமையைக் கீதை வழி
காத்தலே மிகுநலமாம்

நம்பிக்கை கொண்டுநின்றோம்
நமனையும் புறங்காண்போம்
அம்பிகை நின் மனங்குளிர—
அபிஷேகம் செய்திடுவோம்—ரத்தத்தை
அபிஷேகம் செய்திடுவோம்.

காழ்த்த முரடர் இங்கே
கல்வீசி வந்தாலும்—உன்
வாழ்த்துடனே சென்றவரை
வீழ்த்தும் வலிவுடையோம்

பாரிலே போர்வெறியர்
பாழ்பட் டழியக் கண்டோம்
மாரிக்குப்பின் வசந்தமென்ன
மகிழ்ந்துவிழா நடத்திடுவோம்

சிலுவையிட்டும் அன்புண்மை
சிரஞ்ஜீவி யாய் வாழும்
கழுமாமும் பட்டெரியும்
கருணைக்கிடர் வரினே.

மோகத்தைப் புறமொதுக்கி
போகத்தைப் புறமொதுக்கி
தியாகக் கனல் குளித்தே
தேசத்தைக் காத்திடுவோம். (பலி)

76. போர் போர் போர்

போர் போர் போர் போ ஜவான்
போர் போர் போர்!
ஜயஜவான்! ஜயஜவான்! ஜயஜவான்!

வெற்றி வெற்றி வெற்றியென்று செல்லுவோம்
வீரமுண்டு தீரமுண்டு வெல்லுவோம்
பெற்றதாய் மகிழ வாகை சூடுவோம்—ஹாஹா!
பேயரக்கர் நடுநடுங்கச் சாடுவோம் (போர்)

எடுங்கள் ஆயுதங்களை
இகலினை நொருக்குவோம்
நடுங்கி யோடப் பாதகர்
நமனும் அஞ்சப் போர்செய்வோம் (போர்)

* * *

செல்வோம் சுதேசப்புதல்வர்—நம்
சீர்த்தி பெருகுமிந்நாளே
கொல்பகை ரத்தக்கொடியைத்—தாங்கிக்
கோபங் குமுறுது காணீர்
எல்லையில் தொல்லைகொடுக்கும்—இந்த
ஈனப் பகையை ஒறுக்க
கொல்லெனக் கோடி ஜவான்கள்—குரு
கோவிந்த சிங்கன்போல் வாரீர் (போர்)

பண்டுபுகழ்பெறு நாட்டீர்—ஜய
பாரதப் போர்செய்த நாட்டீர்
திண்டிறல் கொண்டநன் னாட்டீர்—வீர
சிவாஜி வழிவந்த நாட்டீர்
குண்டரின் கொட்ட மடங்க—கொடுங்
குண்டுக்குக் குண்டு கொடுப்போம்
மண்டலம் மங்கலமாக—வாழ
மாலெனப் போர்செய்ய வாரீர் (போர்)

வீரன் ஒருவன் விழுந்தால்—நூறு
வீரர் எழுந்துமுன் னிற்பார்
போரிலே சிந்திய ரத்தம்—புகழ்
பொங்கச் சரித்திரந் தீட்டும்
கார்முக ராமன் அருள்வான்—கீதைக்
கண்ணன் அடியரைக் காப்பான்
சூரனை வென்ற முருகன்—வேல்
துணையுண்டு ஜயமுண்டு வாரீர். (போர்)

கட்டுகளை யுடைப்போம்—பகைவர்
காவல்களைத் தகர்ப்போம்
எட்டுத் திசைகளிலும்—பறந்தேறி
ஏவுகணை விடுவோம்
முற்றுகையை முறிப்போம்—இமாலய
முடியிற் கொடிநடுவோம்—ஜய
நெற்றிக்கண்ணன் அருள்வான்—மிக
நேர்மையாய்ப் போர்புரிவோம் (போர்)

வென்றுயிர் கொண்டுவரின்—இங்கே
வெற்றிநடம் புரிவோம்
கொன்றுயிர் மாய்ந்துவிடின்—எங்கள்
கொற்றங் கவிதை பெறும்
பொன்றும் உடல் கொடுத்தே—இங்கே
பொன்றுப்புகழ் பெறுவோம்
சென்று புதுப்பிறவி—கொண்டிந்த
தேசத் தொண்டிற் குறுவோம் (போர்)

ஆக்கமளித்திடும் போர்—வாழ்க
அறம் வளர்த்திடும் போர்—நல்ல
நோக்க முடையதிப்போர்—மிக
நுட்பமுடையதிப் போர்
ஊக்கமுடன் முயல்வோம்—இங்கே
உண்மை வெல்லும் பாரீர்
போர் போர் போர் போர்
வெற்றி வெற்றி வெற்றி யென்று செல்லுவோம்
வீரமுண்டு தீரமுண்டு வெல்லுவோம்.

77. டாங் டாங் டடடாங்

டாங் டாங் டடடாங்....டாங் டாங் டடடட டாங்
டரடர டரடர டோம்

இந்தி யாவின் மகுடம் ஆன
இமயமலை மேலே
உந்தி உந்தி முந்தும் இந்த
உரத்த போரைப் பாரீர் (டாங்)
ஊக்கமுடன் வாரீர்!

* * *

பனிப்பாறையிலே பதுங்கிநின்றே
பகைவர்மேல் பாய்வோம்
சினந்த பகைவர் சீறியெதிர்ப்பார்
சிதற அடித்திடுவோம் (டாங்)

குப்பெனப்பாயும் கூட்டப்பகையைக்
குப்புற வீழ்த்திடவே
கப்பெனப் பற்றி அனுமான் போலே
கால்வாறி யடிப்போம் (டாங்)

ஜேஹிந்தென்றே முரசு முழங்க
சேர்ந்துமுன் செல்வோமே
ஹோவென் றலறி யரக்கர் கூட்டம்
உருண்டு வீழ்ந்திடுமே (டாங்)

கொல்லெனக் குண்டு வீசும் கொடியர்
கொட்ட மடக்கிடுவோம்
பல்லுடை பட்டுப் பாறையிலேயவர்
பல்டி யடித்திடுவார் (டாங்)

கடும்பசிதீர ரொட்டித் துண்டைக்
கடித்து மென்றிடுவோம்-அப்போ
திடுதிடுவென்று சுடுவெடிஎட்டுத்
திசையதிரச் சிதறும் (டாங்)

பகலெல்லாம் போர் இரவெல்லாம் போர்
படுத்துறங்குவ தார்?
இகலைக் கொல்லு மிரத்தக் கூத்தில்
இமைக்க நேரமுண்டோ? (டாங்)

காட்டுக்குள்ளும் கணவாய்க்குள்ளும்
கரந்து சுடுவார்கள்
தீட்டு வோம் அவர் தீமை தீரத்
திடுதிடுஎனச் சுடுவோம். (டாங்)

ஆடுதிருடும் ஓநாய்போல
அரக்கர் வருவார்கள்
தேடியவரைத் திண்ணடிபோட்டுத்
தீர்த்துக் கட்டிடுவோம். (டாங்)

78. மனச்சாட்சி சூடு கொடுத்தல்

பஞ்சசிலம் போற்றிவரும் பாரதத் தாயை
வெஞ்சமரில் வெற்றிகாணும் வீணனேனே
உலகமெல்லாம் கட்டியாளக் கலகஞ் செய்தேனே
கலகப்பூதம் என் கழுத்தில் கத்திவைத்ததே
ஆசைகொண்டே காசினியை நாசஞ்செய்தேனே-இந்து
தேசத்திலே வைத்ததீயும் திரும்பிச் சூழுதே...
சொத்தையென்று பாரதரைத் தொல்லை செய்தேனே—
மொத்தி மொத்தி என்னுயிரைப் பிய்த்துவிட்டாரே...
கண்டகண்ட அண்டப்புளுகு கட்டிவிட்டோமே—என்
வண்டவாளம் கண்டுலகம் வம்புபேசுதே.

பழைய தருமக் கோட்டையிடிக்கப் படை யெடுத்தேனே
மழையைப்போலத் துண்டுத்தீயை மாய்த்துவிட்டாரே...
அலிகளென்று பாரதரை ஆட்டிவைத்தேனே—வீரப்
புலிகளாக ஒன்றுகூடிப் புடைத்து விட்டாரே.
ஆடுதிருடும் நரியைப் போலக்கேடு சூழ்ந்தேனே
நாடுதிருட வந்தெனக்கே நட்டமாச்சுதே.
பறவைக்கூட்டைக் கலைத்ததுரங்கின் பாழுங்கதையே!
அறத்தின்கோட்டை இடிக்கவந்தேன் அவலமானேனே
பல்லைக்காட்டிப் பஞ்சசீலப் பண்பை மெச்சினேன்
சொல்லைமீறித் தொல்லையிலே சிக்கிக் கொண்டேனே
மதம் பெருகிக் கதம் பெருக்கி மல்லெடுத்தேனே
சுதந்தரத்தின் ரத்தச்சூட்டில் சுருண்டு வீழ்ந்தேனே.
வீரதீர சூரரிங்கே விழித்தெழுந்தாரே
பாரதத்தின் சக்திதன்னைப் பணிந்து போவேனே.
உண்மை வெல்லும் உண்மை வெல்லும் உண்மை
வெல்லுமே
திண்மையாக உண்மை வெல்லும் தேசமெங்குமே.

79. அள்ளிக்கொடுங்கள்

அள்ளிக் கொடுங்கள் அள்ளிக் கொடுங்கள்
அன்னை நாடு வாழவே
துள்ளித் துடித்தே சுதந்தரமோங்கத்
தூட்டும் பொன்னும் தூவுங்கள்

நாடே பெரிதோ நகையே பெரிதோ
நங்கை மாரே சொல்லுங்கள்
வீடே பெரிதோ வீரம் பெரிதோ
வீரர் அணியில் நில்லுங்கள்.

மானம் பெரிதோ தானம் பெரிதோ
மனதைத் தொட்டுப் பாருங்கள்
வானம்போலே உடல்பொருளாவி
வழங்கிப் புகழைக் கோருங்கள்.

கனகம் பெரிதோ கடமை பெரிதோ
கண்மணியனையீர் கழலுங்கள்
மனம்போ லாகும் மங்கல வாழ்வு
மன தாரப் பொன் னுதவுங்கள்.

பயிரைக் கோடுங்கள் பண்டங்கொடுங்கள்
பணியைக் கொடுங்கள் நாட்டுக்கே
உயிரைக் கொடுக்கும் உத்தம வீரர்
உடலைப் பேண வாருங்கள்.

அறப்போர் புரியும் ஆண்மை வீரர்
ஆருயிர் நல்கும் தீரமதை
மறப்பார் யாரே மறுப்பார் யாரே
மன தாரப் பொன் வீசுங்கள்...

ஆறிலும் சாவு நூறிலும் சாவாம்
அறிவீர் அறிவீர் அன்பர்காள்
தேரிய தியாக தீரர்க ளிங்கே
சிரஞ்ஜீவிகளாய் வாழ்வாரே

செங்குருதியின் அருவியிலாடும்
தியாக வீரரைத் தேறுங்கள்
தங்கம் பெரிதோ சங்கம் பெரிதோ
சிங்கம்போலே வாருங்கள்
கங்கைபோலே தாருங்கள்.

80. நர்சின் பாட்டு

நாட்டு வீரர் நன்மை பெறவே
நர்சா யுதவிடுவேன்—அன்பு
காட்டுவேன் துயர் ஒட்டுவேன்—உயிர்
மீட்டுவேன் மகிழ்வேன் (நாட்டு)

போரும் பகையும் கர்சு—மக்கள்
பொழிவார் நாளும் பர்சு
நாறும் காயம் ஒர்சு—அதை
நயமாய் ஆற்றும் நர்சு—நான் (நாட்டு)

கைகால் முறிந்தவீரர்—படு
    காயப்பட்ட சூரர்
மெய்சோர்ந் தயரும் தீரர்—அவரை
    மெத்தென வைத்தாற்றிடுவேன்—அவர்
    வேதனையை மாற்றிடுவேன் (நாட்டு)

போர்வெறி குமுறும் களத்தே—நாம்
    புகுந் துடல்களைக் கொணர்ந்தே
ஆருயிரீயும் தொண்டில்—ஓர்
    ஆனந்த முள்ளது தோழீ (நாட்டு)

நோகும் மாந்தர் தேற—உடல்
    நொந்தவர் நோவறத் தெளிய
சாகும் ஜீவன் பிழைக்க—உழைக்கும்
    சமய சஞ்ஜீவி நர்சு (நாட்டு)

தேடிய செல்வம் போலே—நல்ல
    திருமுகப் புன்னகை யாலே
ஓடிவந்துதவும் தெய்வம்—செய்யும்
    உதவிக் கிணையோ வையம். (நாட்டு)

நல்ல நல்ல நர்சு—இந்த
    நாட்டுக் குதவும் நர்சு
அல்லும் பகலும் அல்லற்பட்டார்
    அருகே யுதவும் நர்சு—அவள்
அன்பே வெற்றிக் கரசு—நான்
    அன்பு நர்சு இன்ப நர்சு
    நாட்டுக் குதவும் நர்சு......

81. இரத்த தானம் செய்வீர்

இரத்த தானம் செய்வீர்—அங்கே
    இரத்தப் போரில் இரத்தம் வடிக்கும்
    உரத்த வீரர் வாழ— (இரத்த)

அறப்போர் புரியும் ஆண்மை வீரர்
அடிபட் டயரும் போது
இறவாதின்னும் எழுந்து பொருத
இந்தியர் சக்தி பெருகவே (இரத்த)

பனிகுளிர் வாடை பட்டினி தாங்கிப்
படுகள மடுபோர் புரியும்
துணிவுள வீரர் மணிகளுக் கீவீர்
சூடான ரத்தத் துளியே (இரத்த)

சக்தியே ரத்தம் தாவிடும் வீரத்
தணலே ரத்தம்—போரின்
சித்தியே ரத்தம் சேமமே ரத்தம்
தேசமே ரத்தத் துடியாம் (இரத்த)

தின்று பெருக்கும் தேகம் வீழும்
தியாகப் புகழே வாழும்
இன்றதி லூறும் இரத்தத் துளியை
இந்தியத் தாய்க்குத் தாரீர்! (இரத்த)

82. பாரத வீரர்

பாரதர் கையைப் பலப்படுத்துங்கள்
பாருக்கெல்லாம் பலமாம்
பாரதவீரர் பண்பாடுயரப்
பாருக்கெல்லாம் நலமாம்
நேரிய நடையார் சீரிய சொல்லார்
நிலவுலகத் தலைவர்
கூரிய மதியார் கொள்கையிற் பெரியார்
குவலயத் தோழர்களே. (பா)

உலகினில் அமைதி நிலவிடச் செய்யும்
உத்தம பத்தரவர்
கலகமில்லாத காலத்தைக் காணும்
கருணைச் சித்தரவர்.

இந்தியரேனும் கிறிஸ்துவரேனும்
இஸ்லாமியரேனும்
சந்ததம் புத்தர் சமணர்களேனும்
சரிசம மானவரே (பா)

அன்பை நினைத்தே அன்பை வளர்க்கும்
அன்புத் தொண்டரவர்
துன்பமிழைக்கும் துஷ்டரை விழ்த்தத்
துணிந்து முன்சென்ருர்.
இப்புறஞ் சிரித்தே அப்புறஞ் சினக்கும்
இகலவர் வஞ்சனையைக்
குப்புற விழ்த்திக் குடியரசாட்சிக்
கொடியினை வாழ்த்திடுவோம். (பா)

83. தேச விடுதலைச் சிங்கமே

தேசவிடுதலைச் சிங்கமே—தியாகத்
தீயில் புடம் வைத்த தங்கமே
காசினி வாழத் தவஞ் செய்யும்—வீரக்
கண்மணி நன்மணி வாழ்கவே!

ஏழைக்கிரங்கிடு ந் தோழனே—நாட்டின்
இன்னலைத்தீர் அறிவாளனே
கோழையடிமைத் துயர்கெட—மனங்
கொண்ட பொதுநலத் தொண்டனே!

வீரசுதந்தர பேரியே—இந்த
மேதினி வாழ்த்துபகாரியே
காரியவிறு கனன்றிடும்—நல்ல
கைராசி மிக்க வுதாரியே.

சமயத்திற்குதவும் சஞ்ஜீவியே—வாழ்க
சகம்புகழும் சிரஞ்ஜீவியே
அமைதியை நாட்டிடும் அன்பனே—இங்கே
அனைவர்க்கும் இனியநற் பண்பனே.

ஆழக்கருத்துடன் பேசுவான்—அவன்
அஞ்சாத தர்மத்தை ஏசுவான்
வீழக் கொடுமையைச் சாடுவான்—தேசம்
வெற்றிபெற வழி தேடுவான்.

கருணைக் கடலவன் உள்ளமே—நீண்ட
கற்பகக் கைதரு வள்ளலே
தருண மழையென வந்தனன்—அவன்
தயவுக்கு வந்தனம் வந்தனம்.

84. கூட்டப் பிரார்த்தனை

தேசத்தைக் காத்திடுவாய்—பரமா
ஜெய மளித்திடுவாய்—நாங்கள்
நேசிக்கும் பாரததேசந் தழைத்திட
நின்னரு ளீந்திடுவாய்

பாபமொன்றும் அறியோம்-பிறரைப்
படையெடுத் தறியோம்
சாபமென வந்த கோபப்பகை வீழச்
சக்தியளித்திடுவாய்-காரிய
சித்தி யளித்திடுவாய்.

சிவனிருக்கும் மலை-பராசக்தி
திகழ் இமயமலை-முனிவர்
தவமிருக்கும் தனிப்பெரு மாமலை
தன்னை யிழப்போமோ-எங்கள்
தலையை யிழப்போமோ ?

தாயின் அமுதெனவே-கங்கை
தழைத்த சக்திமலை-யுத்தப்
பேயின் இரத்த வெறித்திமி ரானது
பேதுறலும் விதியோ-சாதுக்கள்
நோதுறலும் விதியோ ?

அன்பினையே வளர்த்தோம்–அஹிம்சை
அறத்தை நம்பி வந்தோம்
பண்பறியாத பகைவர் புகுந்தனர்
பலமளித்திடுவாய்–சேனை
பலமளித்திடுவாய்–ஆயுத
பலமளித்திடுவாய்–ஆத்ம
பலமளித்திடுவாய்.

தஞ்சம் புகுந்துவிட்டோம்–பரமா
தாழ்வு வராதருளாய்
நஞ்சொத்த நாத்திகர் நடுநடுங்கிட
நல்ல பலந்தருவாய்–வீரர்
வெல்லும் பலந்தருவாய்.

கார்முக ராமா–கீதைசொன்ன
கண்ணனே நின் சரணம்
சூரனைக் கொன்ற சுடர்மணி வேலவா
சுப்ரம்மண்யா சரணம்–சுதந்தர
ஜோதியே நின் சரணம்.

85. வெற்றிச் சங்கு

குந்தலவராளி] [திஸ்ர ஏக தாளம்

பல்லவி

ஓம் சாந்தி சாந்தி யென்றே
ஊது வெற்றிச் சங்கமே (ஓம்)

அநுபல்லவி

சேம மாகப் பூமி யெங்கும்
சேர்ந்து நன்று வாழவே (ஓம்)

சரணம்

எல்லையற்ற நாடெலாம்
இரத்த வெள்ள மாக்கியே
தொல்லை செய்த பேயரக்கர்
தோல்வியுற் றழிந்தனர் (ஓம்)

நகர்களை அரைநொடி
நரகச் சாம்ப லாக்கியே
தகர்சினப் படைக்குலம்
சரண்புகுந்த நாளிதே (ஓம்)

நிலத்தும் வானும் நீரிலும்
நெருங்குயிர் நொருங்கவே
கொலைக்களங்கள் ஆக்கிய
கொடூரப்போர் குமைந்ததே (ஓம்)

அன்பு கொண்ட நேயராய்,
அறிவு மிக்க தூயராய்,
மன்பதைகள் இன்ப மாக
வாழ்க வாழ்க வாழ்கவே. (ஓம்)

86. வல்லரசு

வல்லரசானதுவே—என்றும்
வாழிய பாரதமே
வெல்லரசானதுவே—இதன்
வீரர்கள் வாழியவே!

குமரிமுனை முதலே—சிவ
குண்டலி சக்திவளர்
இமயமுடி வரையில்—எங்கள்
இந்தியக் குடியரசே!

சிந்தையில் ஒன்றுபட்டோம்—நாம்
செய்கையில் ஒன்றுபட்டோம்
தந்தை நமக்கிறைவன்—பாரதத்
தாய்நமக் கின்னுயிராம்.

பொதுமனச் சாட்சியினுல்—நல்ல
பொதுநலம் பேணுகின்ருேம்
புது யுகச் சமயோகம்—இந்தப்
புவியெங்கும் பொலிந்திடவே.

யாருக்குந் தீமையின்றி—இனி
எவருக்கும் தாழ்மையின்றி
போருக்கே யிடமின்றி—பரி
பூரணம் பூத்ததுபார்!

கொட்டுக ஜயபேரி—இந்தக்
குவலய வட்டமெல்லாம்
எட்டுக நம் இசையே—உலகில்
எல்லாரும் வாழியவே!

O-,1MSB,2
N63

சுத்தானந்தா அச்சகம், அடையாறு, சென்னை-20.